விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

-9 NOV 2009

# வலம்புரி


பக்கங்கள்: பதின்னான்கு ═══ Valampurii ═══

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 23 திங்கட்கிழமை (09.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325




# தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்க முஸ்லிம் காங்கிரஸ் தீவிர முயற்சி

## களத்தில் இறங்கினார் ஹக்கிம்



(கொழும்பு)

இலங்கையிலுள்ள தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஈடுபட்டுள்ளது என்று அதன் தலைவர் ரவூஃப் ஹக்கிம் தெரிவித்துள்ளார். இது குறித்து பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. *(14ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கைக்கு வர முயற்சிக்கும் ஐ.நா. பிரதிநிதிக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

இலங்கைக்கு செல்ல பல மாதங்களுக்கு முன்னரே கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை அதற்கான உத்தியோகபூர்வ பதில் கிடைக்கவில்லையென ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் தொடர்பான சிறப்பு பிரதிநிதி ப்ரான்க் லா ரூ கூறுகின்றார்.

இலங்கையில் உள்நாட்டு ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் நிலைமை குறித்து கண்டறியும் பொருட்டு விஜயமொன்றை மேற்கொள்ள தொடர்ந்து தான் முயற்சித்து வருவதாகப் ரான்க் லாரூ தெரிவிக்கிறார்.

நான் ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதரத்துடன் உத்தியோகபூர்வ சந்திப்பினை கடந்த ஜூனில் நடத்த எனது ஆர்வத்தை தெளிவுபடுத்தியிருந்தேன். உத்தியோக பூர்வமாக கடிதம் அனுப்பப்பட்ட திகதி எனக்கு நினைவிலில்லை. ஆனால் ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் ஒரு தினத்தில் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது. இலங்கையிலிருந்து அதிகாரபூர்வமான பதில்கிடைக்கவில்லை என்றார் (ச-3)

## தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் கொழும்பு அரசியல் ஆட்டம் காணும்!

### ஆங்கில ஊடகம் ஆருடம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத்தேர்தல் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையை தொடர்ந்து தென்னிலங்கை அரசியலில் பல மாற்றங்கள் நிகழலாம் என தென்னிலங்கை அரசியல் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதி மகிந்தவின் தேர்தல் அறிவிப்பு மற்றும் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திரக்கட்சியின் பொதுக்குழு கூட்டம் போன்றவற்றை தொடர்ந்து தென்னிலங்கை அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படலாம். அரச தரப்பில் உள்ள நான்கு அமைச்சர்கள் எதிர்த்தரப்புக்கு *(14ஆம் பக்கம் பார்க்க)*

## வாக்கெடுப்பை மறந்த எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

பொதுவாக வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் கடுமையான கருத்து மோதல்களில் ஈடுபடுவதுண்டு. ஆனால் கடந்த வாரம் எதிர்க்கட்சிகள் சரத் பொன்சேகாவின் விடயத்தில் அதிக அக்கறை காட்டியதனால் நிதி அறிக்கை மீதான வாக்கெடுப்பை மறந்துபோனதாக கொழும்பில் இருந்து *(14ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையில் இடம் பெயர்ந்த மக்களை விரைவாக மீள்குடியேற்ற வேண்டும்!

### அவுஸ்.அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து அதிகளவான தமிழ் மக்கள் அரசியல் தஞ்சம் கோரி அவுஸ்திரேலியாவுக்கு வருவது மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக பேசுவதற்கே தான் இலங்கை வந்ததாக அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் சிமித் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மைக் *(14ஆம் பக்கம் பார்க்க)*

## புலிகள் இல்லாதொழிக்கப்பட்டாலும் தற்கொலை போராளிகள் உள்ளனர்

### ரஜீவ விஜயசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லா தொழிக்கப்பட்டுள்ள போதிலும் தற்கொலைப் போராளிகள் எஞ்சியுள்ளனர் என மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.


கடந்த மே மாதம் யுத்தம் நிறைவடைந்த தருவாயில் 3இலட்சமாக காணப்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையை வரும் ஜனவரி மாதமளவில் *(14ஆம் பக்கம் பார்க்க)*

## பொன்சேகாவுக்கு அதரவளிப்பதா? இறுதித்தீர்மானம் எடுக்கவில்லை

### என்கிறார் மனோ கணேசன்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிப்பது தொடர் பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என எதிர்க்கட்சி கூட்டமைப்பின் பிரதான கூட் டணி கட்சிகளில் ஒன்றான ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். *(14ஆம் பக்கம் பார்க்க)*



## ரணில் இந்திய விஜயத்தின் போது பாதுகாவலர்கள் செல்லத்தடை!

### அரசு அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தன்னுடன் தனது மெய்பாதுகாவலர்களை இந்தியாவுக்கு அழைத்து செல்வதை அரசு தடுத்துள்ளதாக அந்த கட்சியின் *(14ஆம் பக்கம் பார்க்க)*

பேச்சாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும்



ஏஷியன் பெயின்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் அனுஷரணையுடன் இன்று பகல் 12 மணி முதல் (09.11.2009)

வேல் முருகன் வர்ண வங்கி ஆரம்பிக்கப்படுகின்றதென்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சகலவித தீந்தை வகைகளுக்கும் கட்டிடப் பொருட்களுக்கும்

வேல் முருகன் வாணிப நிலையம்

56 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 9437

(3906)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அல்லைப்பிட்டி மண்கும்பான் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் சந்திப்பு

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செய லாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் அல்லைப் பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களிலி ருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான சந்திப் பொன்று நேற்று காலை மண்கும்பான் வீர கத்தி விநாயகர் ஆலய மணிமண்டபத்தில் நடைபெற்றது.


கடந்த காலத்தில் இடம்பெற்ற மோதல் கள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களில் மீள்குடியேறுவதற்கு என மண்கும் பான் பகுதிக்கு 51 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேரும் அல்லைப்பிட்டியில் மீள்குடியேறு வதற்கு என 15 குடும்பங்களைச் சேர்ந்த 47 பொதுமக்களும் இனங்காணப்பட்டுள்ளனர். அந்த மக்களின் மீள்குடியேற்றப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு என வேலணைப் பிரதேச செயலாளர் மு.நந்தகோபன், அப்பகு திக் கடற்படை உயரதிகாரிகள், குடிநீர் போக் குவரத்து மற்றும் அத்தியாவசிய சேவை விநியோகங்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி களும் சமுகமளித்திருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீடுகளை மீளவும் திருத்தியமைப்பதற்கான ஏற்பா டாகத் தேவையான தகரம் மற்றும் மரங் களை விநியோகிப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதாகத் தெரிவித்த அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா அவற்றினை மக்களுக்கு விநியோகிப்பதற்குக் குறைந்த பட்சம் ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் தேவைப்படும் என்பதால் உடனடிக் குடிய மர்விலுள்ள சிரமங்கள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

அப்பகுதி மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துவதற்கான முன்னேற்பாடாக இன்று காலை வேலணை மத்திய கல்லூ ரிக்கு அனைவரும் சமுகமளித்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கடற் படை அதிகாரிகளிடம் தேவையான பதிவுக ளை மேற்கொண்டு உதவுமாறும் அமைச்சர் அப்பகுதிப்பொதுமக்களிடம்கேட்டுக்கொண்டார்.

மீள் குடியமரவுள்ள பெரும்பாலான குடும்பங்களின் பிள்ளைகள் யாழ். நகரி லுள்ள பாடசாலைகளுக்குச் செல்வதால் மீளக்குடியமர்ந்த பின்னர் பாடசாலைக ளுக்குச் செல்வதற்கு வசதியாகத் தமது பகு திக்கான பஸ் சேவையையும் ஏற்பாடு செய்து தருமாறு அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை மண்கும்பான் ஆலயத் திற்கு வருகை தரும் பொதுமக்களுக்குக் குடிநீரை வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிரமங் களைக் கவனத்தில் எடுத்த அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா அங்கு வருகை தந்தி ருந்த நீர்விநியோக அதிகாரிகளுடன் கலந் துரையாடி அக்கோவிலில் நீர்த்தாங்கி ஒன்றை வைப்பதுடன் கொள்கலன்கள் மூலம் நீரை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும். (ச)






ஜனாதிபதியின் ஆலோசகர் வாசுதேவ நாணயக்கார மக்களை சந்திக்கும் நிகழ்வு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அரங்கில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் வாசுதேவ நாணயக்கார உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். படங்கள்: ரம்சன்

# வன்முறைகளற்ற சுதந்திரமான வாழ்வை தமிழ் மக்களுக்கு அரசு வழங்க வேண்டும்

## தென்பகுதி ஊடகவியலாளர்களிடம் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமது மண்ணில் ஆண்டாண்டு வாழ்ந்து வந்த தமிழர்கள் வன்முறைகளற்று சுதந்தி ரமாக வாழ அரசாங்கம் இடமளிக்க வேண் டும் என தென்னிலங்கை ஊடகவியலாளர் களிடம் அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கேட்டுக் கொண்டார்.

யாழ். மாவட்ட நிலைவரங்களை ஆராய்வ தற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த தென்னிலங்கை ஊடகவியலாளர்களுட னான சந்திப்பு நேற்று அரச சார்பற்ற நிறுவ னங்களின் இணையத்தின் அலுவலகத்தில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பாக ஊடகவியலாளர் களிடம் விபரிக்கையில்,

கடந்த கால யுத்த நெருக்கடியினால் ஏ-9 பாதை மூடப்பட்டு பின்னர் தற்போது யுத் தம் முடிபுற்ற நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்திற்கு அரசு அனுமதி வழங் கியுள்ளது.

எனினும் ஏ-9 வீதியூடான யாழ். குடா நாட்டிற்கான பயணத்தில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளையும் அவலங்களையும் அலைச்சல்களையும் எதிர்நோக்கி வருகின் றனர்.

அவர்கள் விரும்பிய மார்க்கத்தினூடாக சுதந்திரமாக பயணங்களை மேற் கொள்ள வேண்டும்.

இராணுவ வளங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டதே உயர் பாதுகாப்பு வலயம். இதற்கு தமிழ் மக்களின் கிராமங்கள் இரை யாகினால் இக் கிராமங்களை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் பின் னர் மக்கள் தமது சொந்த நிலங்களை இழந்து வாழ்வாதாரத்தை விட்டு இடம் பெயர்ந்த நிலையில் வாழ்கின்றார்கள்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற் றப்பட்டு இங்கு சொந்த இடங்களைச் சேர்ந்த மக்களை மீள்குடியேற்றி அவர்களின் வாழ்க் கைக்கு புத்துயிர் கொடுக்க வேண்டும்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற் சாலையை புனரமைக்க அரசாங்கம் நடவ டிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ். மாவட்டம் சுண்ணாம்புப் படையைக் கொண்ட தரைத் தோற்றத்தை உடையது. தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகின்ற பொ ழுது காங்கேசன்துறையை அண்டிய பிரதே சங்கள் சுண்ணாம்புக்கல் அகழ்விற்காக ஆழமாக தோண்டப்படும் நிலை ஏற்படும்.

இதனால் நன்னீர் நிலைகள் உவர் நீராக்கப்படுவதுடன் நிலத்தடி நீர் பாதிப்ப டையும்.

இதனால் யாழ். மாவட்டம் எதிர்காலத்தில் பாரிய சூழல் நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை உருவாகும்.

எனவே சீமெந்து தொழிற்சாலை மீள இயக்குவதில் சூழல் பாதிப்படையாத வகை யில் சாதகமாக பரிசீலனையை மேற்கொள் ளவது அவசியம்.

யாழ். மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புக் களுடன் இணைந்ததாகவும் போக்குவரத் திற்கு இடையூறாகவும் இராணுவக் காவ லரண்கள் காணப்படுகின்றன. இவை மக் களுக்கு நெருக்கடியாகவே அமைந்துள் ளன.



இவை உடனடியாக அகற்றப்பட வேண் டும். அரச சார்பற்ற நிறுவனங்களை சுதந்தி ரமாக செயற்பட அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

1990ஆம் ஆண்டில் யாழ்ப்பாண முஸ் லிம் மக்கள் இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்க்கின்றார்கள். இவர்கள் யாழ்ப்பாண தமிழ் மக்களுடன் இன ஐக்கியத்துடன் சகோ தரத்துவமாக வாழ்ந்தவர்கள். இவர்கள் மீண் டும் யாழ்ப்பாணத்தில் மீள்குடியமர்த்தப்படு வதில் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மகிழ்வுடன் வரவேற்கின்றனர்.

எனவே சுதந்திரமான வாழ்விற்கு அர சாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என சீ.வீ. கே.சிவஞானம் தென்னிலங்கை ஊடகவி யலாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக தென்னிலங்கை ஊடக வியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 30 ஆண்டு காலமாக தமிழர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்கி வரு கின்றார்கள் என்பது எமக்குத் தெரியும். யாழ்ப்பாண மக்களின் பிரச்சினைகளை தென்பகுதி மக்களுக்கு தெரியப்படுத்து வோம் எனக் கூறினர். (ந-7)


### விற்பனைக்கு

கண்ணாபுரம், கொட்டடியில் 2 வீட்டுடன் கடையும், காதி அபூபக்கர் வீதியில் ஒரு வீட்டுடன் கூடிய கடையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:- இல.33, கண்ணாபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம். (3902)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணம் சைவ சமயத்தைச் சேர்ந்தவரும் 29 வயது, Msc முடித்து Mechanical Engineer ஆகவும், Canadian PR, ஏழுச் செவ்வாய், பூச நட்சத்திரம் மொத்த பாவம் 30 உடையவருக்கு, வைத்தியத் துறையில் படித்த, அல்லது படித்துக் கொண்டிருக்கும் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 071 3163508 (3888)


## ஜெய்கா அணியினருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய பாடசாலைகளில் கல்வி அமைச்சின் ஜெய்கா அணியினரின் மதிப்பீடும் கலந்துரையாடலும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள கல்வி அமைச்சின் ஜெய்கா அணியினருட னான இக் கலந்துரையாடலில் ஜெய்கா செயற் றிட்ட முதலாம் அணி, இரண்டாம் அணி, பாடசாலை அதிபர்கள், தவலட்டத்தலைவர்கள் உரிய ஆவணங்களுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

## மண்டைதீவு மக்கள் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம்

(மண்டைதீவு)

கனடா வாழ் மண்டைதீவு மக்கள் ஒன்றி யத்தின் அனுசரணையுடன் நடைபெறும் மண்டைதீவு மக்கள் ஒன்றிய அங்குரார்ப் பணக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு வேலணை பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகத்தில் நடைபெற வுள்ளது.

சமாதான நீதவான் அ.ஸ்ரீபத்மராசாவின் ஏற்பாட்டில் மண்டைதீவு ஜே/7 மற்றும் 9இன் கிராமசேவையாளர் இ.ரமேஸ் தலைமையில் நடைபெறும் இவ் அங்குரார்ப்பணக் கூட்டத் துக்கு மண்டைதீவு வாழ் மக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள் ளது. (ச)

## ஜனாதிபதியின் ஆலோசகருடன் பத்மநாபா அணி பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வாசு தேவ நாணயக்காரவை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பத்மநாபா அணியினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த 6ஆம் திகதி இரவு யாழ்பாடி விடு தியில் இடம் பெற்ற இச்சந்திப்பில் யாழ். மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து நெருக் கடிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள் ளது.இது தொடர்பாக அவரிடம் மகஜர் ஒன் றும் கையளிக்கப்பட்டது. (ச)

## கட்டாக்காலிகளால் நெற்செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்ச் செய்கை அழிவ டைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரி வித்தனர்.

நுணாவில் பகுதிகளுக்குள் புகுந்துள்ள மாடுகள் அங்கு நெற்பயிர்களை அழித்துவ ருவதாகக் கூறப்படுகிறது.

மறவன்புலோ கமக்காரர் அமைப்பினால் அப்பகுதியில் நின்ற மாடுகள் முட்கம்பி வேலிக ளுக்கு அப்பால் துரத்தப்பட்டன.

இம்மாடுகளே நுணாவில் பகுதிக்குள் புகுந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இராணுவக் காவலரண்கள் அகற்றப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலும் அதனை அண் மித்த பகுதிகளிலுமிருந்த இராணுவக் காவல ரண்கள் அகற்றப்பட்டு வருவதுடன் சில காவ லரண்கள் பின் நகர்த்தப்படுகின்றன.


பிறவுண் வீதியில் நரிக்குண்டு குளத்துக்கு அருகிலுள்ள மின்மாற்றிக்கு பாதுகாப்பு வழங்கு வதற்காக அமைக்கப்பட்ட காவலரண் கடந்த வாரம் முற்றாக அகற்றப்பட்டது.

இதைவிட ஓட்டுமடம் சந்தியில் அமைக்கப் பட்டிருந்த இராணுவ காவலரணும்,பிறவுண் வீதியும்,அரசடி வீதியும் இணையும் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த காவலரணும் பொதுமக் களின் நன்மைகருதி பின்நகர்த்தப்பட்டுள் ளன.

காவலரண்கள் பின்நகர்த்தப்பட்டுள்ளதால் அப்பகுதியிகளினூடான போக்குவரத்து நெரி சல் குறைவடைந்துள்ளது. (எ-1)

# கச்சதீவை மீட்க ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டும்

## ராமதாஸ் கோரிக்கை



(சென்னை)

கச்சதீவை மீட்க ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டும் என்று பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவுக்குச் சொந்தமான அந்தமான்தீவுகள், இலங்கையின் கடல் எல்லைப் பகுதி க்குள் வருகிறது என்றும், அந்தமான் தீவுகள் இலங்கைக்கே சொந்தம் என்றும் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ரோகித போ கொல்லாகம அறிவித்திருக்கிறார்.

கச்சதீவை இந்திய அரசு இலங்கைக்கு மிகத் தாராளமாக விட்டுக்கொடுத்தது. அதன் காரணமாகவே, அந்தமான்தீவுகளும் எங்களுக்கே சொந்தம் என்று இலங்கை மார்தட்டுகிறது.

இலங்கையில் சீனா புதிதாக கால்பதித்துள்ள நிலைமையும், இலங்கைக்கு முன் எப்போதும் இல்லாத துணிச்சலைக் கொடுத்திருக்கிறது.

இலங்கையின் இந்த மண் ஆசைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதற்கு ஒரேவழி, இலங்கைக்கு தவறாக தாரை வார்க்கப்பட்டுள்ள கச்சதீவை மீட்டு தமிழகத்தோடு இணைக்கவேண்டும். இதற்கு தமிழகம் ஒன்றுபட்டு குரல் எடுப்பவேண்டும். இதுபோன்ற பிரச்சினைகளில் நமது செயல்பாடுகள் நாட்டின் கட்டுக்கோப்பை குலைத்து விடக்கூடாது என்பது முக்கியமானதுதான்.


அதேநேரத்தில் நமது உரிமைகளுக்காகவும், நமக்குச் சொந்தமான மண்ணை மீட்கவும் மத்திய அரசிடம் போர்க்குரல் எழுப்புவதில் தவறில்லை.

அந்த வழியில் இப்போதும் இலங்கையிடம் பறிகொடுத்து விட்ட கச்சதீவை மீட்கவும், அதன்மூலம் தமிழக மீனவர்களைக் காக்கவும், நதிநீர் பிரச்சினைகளில் நமது உரிமைகளை நிலைநிறுத்தவும் பழைய எழுச்சியோடு செயல்பட அனைவரும் முன்வர வேண்டும் என்று ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (6)

# இலங்கை மீனவர்க்ள் 10 பேரும் விடுதலை


கடந்தமாதம் இந்தியக்கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 10 இலங்கை மீனவர்களை இந்தியக்கடலோரக் காவல் படையினர் பிடித்து, சென்னைக்குக் கொண்டு வந்து, காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.


பின்னர் 10பேரும் கைதுசெய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு புழல் சிறை'யில் அடைக்கப்பட்டனர். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படி தமிழக அரசு கடந்த சனிக்கிழமை உத்தர விட்டதைத் தொடர்ந்து அவர்கள் விடுவிக் கப்பட்டுள்ள னர். (6)




# கோவை உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஜனாதிபதி, பிரதமரை அழைக்கத் திட்டம்

## கருணாநிதி தெரிவிப்பு





(கோவை)

உலகத்தமிழ் செம்மொழி மாநாடு கோவையில் ஜுன் மாதம் 24ஆம் திகதி முதல் 4 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் முதலமைச்சர் கருணாநிதி கடந்த வெள்ளிக்கிழமை கோவை சென்றார். கோவையில் வேளாண் அறிவியல் நிலையங்களின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்ட அவர் மாலையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். பேட்டியின் போது நிருபர்கள் கேட்ட கேள் விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு,

கேள்வி: உலகத்தமிழ் செம்மொழி மாநாடு கோவையில் நடைபெறவிருப்பதையொட்டி?

பதில்: தொடக்க கட்ட வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டு உலகம் எங்கும் பல்வேறு நாடுகளில் உள்ள அறிஞர்களோடு தொடர்பு கொண்டு மாநாட்டில் அவர்கள் எல்லாம் பங்குபெற வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பல அறிஞர்கள் நம்முடைய அழைப்பை ஏற்று ஒப்புதல் தெரிவித்து இருக்கிறார்கள். மாநாடு நடைபெறும் இடமான கோவையில் உள்ள மாவட்ட ஆட்சி தலைவருடைய மேற்பார்வையிலும் மாநாட்டு பணிகள் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

கேள்வி: மாநாட்டிற்கு பிரதமரை அழைப்பீர்களா?

பதில்: ஏற்கனவே நடைபெற்ற மாநாடுகளிலே அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது நடைபெற்ற மாநாட்டிற்கு அப்போது குடியரசு தலைவராக இருந்தவர் அழைக்கப்பட்டு கலந்துகொண்டார். அதுபோல இந்த மாநாட்டிற்கும் குடியரசு தலைவர் பிரதமர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி ஆகியோரை அழைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கேள்வி: தமிழில் நன்னூல் போன்ற இலக்கண நூல்களைப் போல வேறொன்று வர மாநாட்டில் முயற்சி மேற்கொள்ளப்படுமா?

பதில்: செம்மொழி மாநாடு அதற்கான அடித்தளமாக அமையக்கூடும். இவ்வாறு கருணாநிதி கூறினார். (6)

# புதுக்கோட்டை மீனவர்கள் மீது இல.கடற்படை துப்பாக்கிச் சூடு

(சென்னை)

புதுக்கோட்டை கோட்டைப்பட்டினம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில் ஒரு மீனவர் படுகாயம் அடைந்துள்ளார். மேலும் 4 படகுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் வலையை அறுத்தெறிந்தும் இலங்கைக் கடற்படையினர் அட்டூழியம் செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டையடுத்து தமிழக மீனவர்கள் உடனடியாக கரை திரும்பி உள்ளனர். 5 நாட்களுக்கு முன்னர் கோட்டைப்பட்டினம் மீனவர்கள் 18 பேர் இலங்கைக் கடற் படையால் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைக் கடற் படையினரின் தொடர் தாக்குதலால் தமிழக மீனவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டு முதல் இலங்கைக் கடற்படை நடத்திய தாக்குதல்களில் இதுவரை சுமார் 400 தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்தும் இவற்றுக்கு நிரந்தர முடிவு கட்ட கோரியும் பலமுறை தமிழக அரசியல் கட்சிகள் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தியிருக்கின்றன. ஆனால் அவற்றுக்கு இதுவரை எந்தப் பயனும் ஏற்படவில்லை. (6)

# இலங்கை கடற்படையை கண்டித்து மண்டபத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்

(பனைக்குளம்)

ராமநாதபுரம் மர்வட்டம் மண்டபத்தில் மனிதநேய மக்கள் கட்சி மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் இலங்கைக் கடற்படையைக் கண்டித்தும் கச்சதீவை மீட்டுத்தரக் கோரியும் மண்டபம் ரயில் நிலையம் அருகில் மனிதநேய மக்கள் கட்சி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் கண்டனப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்திற்கு ம.ம.க.மாவட்ட செயலாளர் சலிமுல்லாகான் தலைமை தாங்கினார். கட்சியின் மாநில பொருளாளர் ஹாருன் ரசீது, செயலாளர் அப்துல்ஹமீது, மற்றும் துணைப் பொதுச்செயலாளர் தமீமுன் அன்சாரி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். (6)

# தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரம்

## கடலோர மாவட்டங்களில் புயல் அபாயம்

(சென்னை)

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தென் மேற்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை தொடர்ந்து நீடிப்பதால், கடலோர மாவட்டங்களில் புயல் அபாயம் ஏற்பட்டுள்ளது. சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

தமிழகத்தில் பெய்துவரும் வடகிழக்கு பருவமழை, கடந்த சில தினங்களாக வலுவடைந்துள்ளது. சென்னை முதல் குமரி வரை பகல், இரவு என்றில்லாமல் மழை வெளுத்து வாங்குகிறது. இதனால், மாநிலம் முழுவதும் உள்ள ஏரி, குளம், அணைகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளும் மள, மளவென நிரம்பி வருகின்றன.

இதற்கிடையே, மழை காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. (6)

# புதிய தலைவர் தேர்ந்து எடுக்கப்பட்டதும் அத்வானி அரசியலில் இருந்து விலகுவார்

## ஆர்.எஸ்.எஸ்.தலைவர் தகவல்

(புதுடில்லி)



பா.ஜனதா கட்சிக்கு புதியதலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அத்வானி அரசியலை விட்டு விலகுவார் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராம் மாதவ் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்றும், பா.ஜனதா கட்சிக்கு புத்துயிர் ஊட்டவும் இளம் வயது உடைய ஒருவரைத் தலைவராகத் தேர்ந்து எடுக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் வலியுறுத்தி வருகிறார். அத்துடன் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருந்த மூத்த தலைவரும், பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எல்.கே. அத்வானி எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது.

தனது பதவி குறித்து சர்ச்சை எழுந்ததையடுத்து அத்வானி விரைவில் அரசியலை விட்டு விலகுவார் என்ற பேச்சு எழுந்தது. அநேகமாக அவரது பிறந்த நாளில் அவர் தனது அறிவிப்பை வெளியிடுவார் என்றும் தகவல்கள் வெளியாகின.

பா.ஜனதா கட்சிக்கு புதிய தலைவர் தேர்ந்து எடுக்கப்பட்ட பிறகே அத்வானி அரசியலை விட்டு விலகுவார் என்று அவர் தெரிவித்தார். இதுபற்றி அவர் கூறியதாவது,

ப.ஜனதா கட்சித்தலைவர் ராஜ்நாத் சிங்கின் பதவிக்காலம் அடுத்தமாதம் (டிசம்பர்) முடிகிறது. புதிய தலைவர் ஜனவரிமாதம் தேர்ந்து எடுக்கப்பட இருக்கிறார். அதற்கான வேலைகள் தொடங்கிவிட்டன. அந்தத் தேர்தலை முன்னின்று நடத்திய பிறகு, ஏற்கனவே முடிவுசெய்தபடி அத்வானி அரசியலை விட்டு விலகுவார். அடுத்த ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் அவர் தனது எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் ராஜினாமா செய்வார் என்று தெரிவித்தார். (6)

அராலிமேற்கு கோட்டைக்காடு நொச்சியம்பதி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வில் கும்பங்கள் உள் வீதியால் எடுத்து வரப்படுவதையும், வசந்தமண்டபம்,மூலஸ்தானம் என்பவற்றிற்கு குடமுழுக்கு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கோபி)

## தொழில்வாய்ப்பு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத்தின் சுனாமி வாழ்வாதார செயற்திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட சாரதிப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்து சாரதி அனுமதி பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளுக்கான வேலைவாய்ப்புச் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல .375, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக நிறுவன இயக்குநர் கி.ஜோ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (6-4)

## காரைநகரில் கால்நடை அபிவிருத்தி நிறுவனத்தின் கிளையொன்றை திறக்க ஏற்பாடு

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை கால்நடை அபிவிருத்தி நிறுவனம் காரைநகரில் தனது கிளை ஒன்றினைத் திறக்கவுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

காரைநகர்ப் பிரதேச மக்களின் நன்மை கருதியே விரைவில் மேற்படி நிறுவனத்தின் கிளை ஒன்றினை அந்தப் பிரதேசத்தில் திறக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காரைநகர்ப் பிரதேசத்தில் உள்ள பலர் வட்டுக்கோட்டையிலுள்ள கால்நடை அபிவிருத்தி நிறுவனத்தில் அங்கத்தவராக இருப்பதாகவும், இவர்கள் அங்கிருந்து குறித்த நிறுவனத்துக்கு வந்து போகும் போது நீண்டதூரம் என்பதால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்தே மேற்படி நிறுவனத்தின் கிளை ஒன்றை அங்கு திறப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தலைவர் தெரிவித்தார். (6)

## ஆன்மீக உரையும் பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் சீடரான ராஜேஸ் ராதாஜி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதனைமுன்னிட்டு அவருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் உயர் ஆன்மீகம் என்னும் பொருளின் உரையும் அதனைத் தொடர்ந்து பிரார்த்தனையும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் 7 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (6-4)

## தீவக கடல் பகுதியில் கடல் படு திரவியங்கள்

(ஊர்காவற்றுறை)

தீவகக் கடல் பகுதியில் விலை உயர்ந்த பல கடல் படுதிரவியங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடற்குதிரை, வலம்புரிச் சங்கு, ஓனார்கிட்டி எனப்படும் வர்ணப்பாய் ஆகிய கடல்படு திரவியங்களுக்கான சான்றுகள் சாட்டி கடல் பகுதியில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-72)




## மீள்குடியேறிய மக்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தர கோரிக்கை

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்கள் வேலைவாய்ப்புகளின்றியிருப்பதாகவும் தமக்கு வேலைவாய்ப்பொன்றினை ஏற்படுத்துவதற்கு சுயதொழில் முயற்சிக்கடன்கள் மற்றும் உதவித் திட்டங்களை வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

மீள்குடியேறிய தமக்கு இங்கு சுயதொழிலில் ஈடுபடுவதற்கான தொழில் உபகரணங்களோ, இதர வசதிகளோ இல்லாதிருப்பதால் அவற்றை புதிதாகப் பெற்று புதிய தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-49)

## ஐக்கிய நாடுகள் தின நிகழ்வு

(மந்துவில்)

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் சைவசமயம், வரலாறு, புவியியல், குடியியல் ஆகிய மன்றங்களும், சாவகச்சேரி அரிமாக்கழகம் 306 B1 உம் இணைந்து நடத்தும் ஐக்கிய நாடுகள் தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் வரலாற்று மன்ற காப்பாளர் திருமதி நவமணி கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக அரிமாக்கழகம் 306 B1 இன் பிராந்திய இணைப்பாளர் லயன் ரி.ஆர்.ரஞ்சன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக அரிமாக்கழகம் 306 B1 இன் மாவட்ட இணைப்பாளர் லயன் க.துரைராசா, சாவகச்சேரி அரிமாக்கழக்த் தலைவர் லயன் ப.செல்லத்துரை, கௌரவ விருந்தினராக அரிமாக்கழகம் 306 B1 இன் பிராந்தியத் தலைவர் லயன் சு.ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்னர்.

மேலும் இந்நிகழ்வில் ஐ.நாவின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் விடயம் பற்றி லயன் க.துரைராசாவும் ஐ.நாவின் செயற்பாடும் பயனுடமையும் என்னும் விடயம் பற்றி வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியமும் சிறப்புரையாற்றவுள்ளார். (6-4-102)

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சரசாலை பொதுநூலகத்தினால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தினரால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட எழுத்து, வாசிப்புப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

### எழுத்துப்போட்டி

வி.கம்சிகா - (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), வி.அபர்ணா -(மட்டுவில் கமலாசினி மகாவித்தி.), பா.ஸ்நேகன்(மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை)

### வாசிப்புப்போட்டி

பிரிவு I

சி.சிவரம்யா -(மட்டுவில் கமலாசினி மகாவித்தி.),ச.சங்கீத் -(மட்டுவில் அ.மி.த.க. பாடசாலை), ஸ்ரீ.தேனுகா (மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை)

பிரிவு II

அ.மானுஷா -(மட்டுவில் சந்திர மௌலீசா மகாவித்தி.), இரண்டாமிடம் இருவர் சி.நிஷாயினி,கு.விதுர்சினி -மட்டுவில் சந்திர மௌலீசா மகா வித்தி.), க.கவிப்பிரியா -(மீசாலை வீரசிங்கம் மகாவித்தி.)

பிரிவு III

கு.ரதீபா-(மட்டுவில் கமலாசினி மகா வித்தி.),ஜெ.கஜவதனா-(வீரசிங்கம் மகா வித்தி, சி. மாதுமை-(மட்டுவில் சந்திரமௌலீசா மகாவித்தி.) (6-4-29)

## காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதால் ஏற்படும் சாதக, பாதக தன்மைகளை ஆய்வு செய்ய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் ஏற்படும் சாதக, பாதக தன்மைகளை ஆய்வுசெய்யுமாறு யாழ். பல்கலைக்கழகம், இலங்கை பொறியிலாளர் சபை ஆகியவற்றிற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. நீண்டகாலத்தின் பின்னர் காங்கேசன்துறை தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் பொது மக்களின் நன்மை கருதி எதிர்காலத்தில் ஏற்படும் சூழல் பிரச்சினை, தொடர்சியான சுண்ணாம்புக்கல் அகழ்வு, நிலத்தடி நீர் பாதிப்பு, கடற்கோள் விளைவுகள் என்பனவற்றை ஆய்வுசெய்யுமாறு யாழ்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பொறியியலாளர் சபை ஆகியற்றிற்கு கடந்த இரண்டு மாதத்திற்கு முன்னர் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுதொடர்பாக இவை எந்த வித அக்கறையையும் செலுத்தாது பதில் அறிக்கை ஒன்றையும் இதுவரை காலமும் சமர்ப்பிக்காது மௌனித்துவருவதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சுட்டிக்காட்டியுள்ளார். (6-7)

## பொன்னாலை, சுழிபுரம் கடற்பகுதிகளில் கடலுணவுகளின் வரத்து அதிகரிப்பு

(பொன்னாலை)

பொன்னாலை மற்றும் சுழிபுரம் கடற் பரப்புகளில் கடற்றொழில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள் அதிகளவு கடலுணவுகள் பிடிபடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஆரம்பித்திருக்கும் பருவமழை நீரோட்டம் கடற்றொழிலுக்குச் சாதகமாக இருப்பதையடுத்து பெருமளவு கடலுணவுகள் பிடிபடுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு பிடிக்கப்படும் கடலுணவுகளை பொன்னாலையில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட குளிரூட்டிப் பெட்டியில் சேமிக்கும் தொழிலாளர்கள் அவற்றை தென்பகுதிகளுக்கு அனுப்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-49)

# விஜய நகரப் பேரரசு

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

47

வீட்டுவரி, தொழில்வரி, பலவகைப்பட்ட இசை வாணைக் கட்டணங்கள் ,வாணிபப் பொருட்களின் இடம்பெயர்வுவரி சந்தைவரி, நீதிமன்றங்கள் விதித்த குற்றத்தொகை முதலியவை ஏனைய வருவாய் ஆதாரங் களாயிருந்தன.மேலே சொன்ன வரிகளுள் பலவற்றை வசூலிக்கும் உரிமை ஏலத்தில் விடப்பட்டது.

மாகாணங்கள் மைய அரசின் நேராட்சி யிலிருந்த பகுதிகள் ஆகிய இரண்டி லுமே இந்த ஏலமுறை கடைப் பிடிக்கப்பட்டது. எனவே, வரிச்சுமை மிகவும் அதிக மாக வும் கொடுமையாக வும் இருந்ததென்ற எண் ணம் நமக்குத் தோன்று கிறது.

அரண்மனைப் பராமரிப்பு போர் வீரர்கள் பராமரிப்பு அறக்கட்டளைகள் ஆகியவை முக்கியமான செலவினங்கள் அரசனுடைய வருவாயை நான்கு சமபாகங்களாகப் பிரித்து ஒரு பாகத்தை அரண்மனைக்கும் அறக் கடளைக்கும் ஒதுக்க வேண்டும் என்றும் எஞ்சிய பாகத்தை கை யிருப்பு கருவூலத் திற் சேர்த்துவிட வேண்டும் என்றும் கிருஷ்ண தேவராயன் ஒரு கொள் கையை வகுத் தான்.

அஃதொரு குறிக்கோளே தவிர உண்மை நடைமுறை அப்படித்தான் இருந்ததென்று செல்ல இயலாது.அது அவ்வப்போது தோன் றிய நிலமையைப் பொறுத்ததாயிற்று.

இந்து ராஜ்யங்களுக்குள் யாதேனும் ஒன்றை இராணுவ ராஜ்யம் என்று சொல்லக் கூடுமானல் அது விஜயநகரமாகத்தான் இருக்கும் ஏனைய இந்து ராஜ்யங்களை விட விஜயநகர ராஜ்யம் தான் இந்த இயல்புகளை மிகுதியாகப் பெற்றிருந்தது. பேரரசன் நிலை யான ஒரு பெரிய சேனையை வைத்திருந் தான்.

அதில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகியவை இருந்தன. போர் வீரர்கள் நான்கு மாதத்திற்கொரு முறை சம்பளம் வாங்கினார்கள் என்றும் போர்வீரர் களுக்கு சம்பளம் தருவதற்காக மாகாண வரு வாய் மீது காசோலை தரும் முறை ஒரு போதும் கையாளப்படவில்லை என்றும் அப் தூர் ராஜாக் எழுதி வைத்திருக்கிறார். அதனால் மைய அரசின் கருவூலத்திலிருந்தே சம்பளம் நேராக தரப்பட்டது என்பது தெளிவு. மேலும் பேரரசின் பல்வேறு பகுதிகளில் இராணுவ மானியங்கள் ஏராளமாக இருந்தன.அந்த மானியங்களுக்கு நாயக்கர்கள் என்று வழங்கிய இராணுவத் தளபதிகள் அதிகாரி களாய் இருந்தார்கள். தங்களுடைய மானி யத்திலடங்கிய ஊர்களில் வரி வசூல் செய்வ தற்கும் அவற்றின் நிர்வாகத்தை நடத்து வதற்கும் அவர்கள் அதிகாரம் பெற்றிருந் தார்கள். அதற்குக் கைம்மாறாக அவர்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய வற்றை வைத்திருக்கவேண்டும். செய்தி கிடைத்தவுடனே அந்தப் படைகள் பேரரசின் நிலைப்படையோடு சேர்ந்து போர்க்களம் புகுவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். அத்தகைய நாயக்கர்கள் இரு நூறு போருக்கு மேல் இருந்தார்கள் என்று நூனிஸ் குறிப்பிடுகிறார்.

வில்வித்தை, வாள் வித்தை முதலிய வற்றில் பயிற்சியளிப்பதற்கென தனியாக நடத்தப்பட்ட இராணுவப் பள்ளிகள் இருந் தன.

அந்தப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர் கள் பேரரசின் சேனையில் சேர்த்துக் கொள் ளப்பட்டார்கள். பீரங்கிப் படையில் வெளிநாட் டினரே இருந்தனர் என்று பொதுவாகக் கூற லாம். பாசறையைத் தெருக்களும் திறந்த வெளிகள் கொண்ட இயங்கும் நகரம் என்று சொல்லலாம்.

போர்வீரர்களோடு ஏராளமான பரிவா ரத்தாரும் சென்றனர். அவர்கள் சண்டையிற் கலந்து கொள்ளாதவர்கள். போர் வீரர்களு டைய இயக்கத்திற்கு அவர்கள் ஓரளவு தடை யாகத் தான் இருந்தார்கள். ஆனால் படை களோடு பரிவாரமும் செல்வது அந்தக் காலத் தில் பொது வழக்கமாக இருந்தது.

நாட்டைக் காக்கும் பணியில் கோட்டை கள் முக்கியமான இடத்தை வகித்தன. கோட் டையை எவ்வாறு முற்றுகையிடுவது எதிரிகள் கோட்டைக்குள் நுழையாமல் எவ்வாறு தடுப் பது என்பன போன்ற கலைகளில் அந்தக் காலத்துப் போர்வீரர்கள் நல்ல பயிற்சி பெற் றிருந்தார்கள்.

அப்போது நடந்த சண்டைகளில் எதிரி களில் கோட்டைகளை முற்றுகையிடுவ தென்பது அடிக்கடி நடைபெற்ற நிகழ்ச்சி யாக இருந்தது. ராயர் கள் பலதுறை முகங் களையும் இலங் கையின் சில பகுதிகளையும் தங்களுடைய ஆதிக்கத்தில் வைத்திருந்தார்களாதலால் அவர்களிடம் ஒரு கப்பற் படையும் இருந்தி ருக்க வேண்டும்.

ஆனால் அதனு டைய அமைப்பாண் மை எத்தகையது அதில் எத்தனை கப்பல்களும் மாலுமிகளும் வீரர்களும் இருந்தார்கள் என்பன போன்ற தெளிவான செய்திகள் நமக் குக் கிடைக்கவில்லை.

மாகாண ஆட்சி அவ்வப் பகுதியினுடைய முன்னைய வரலாற்றின் அடிப்படையில் அமைந்தது.

தமிழகத்திலும் மேற்குக் கடற்கரையிலும் பழைய அரச மரபினரே ஆட்சி செய்ய அனும திக்கப் பெற்றனர். அவர்கள் பேரரச னுக்குப் பணிந்து அவனுக் குரிய திறையைச் செலுத்தி னார்கள். பேரரசன் நியமித்த உயர் அதிகாரி களின் பொது மேற்பார்வையில் அந்தச் சிற்ற ரசர்கள் ஆட்சி செய்தார்கள்.

அரச குடும்பத்தை சேர்ந்தவர்களையே அந்த மேற்பார்வை பதவிகளில் அமர்த்து வது பொது வழக்கமாயிருந்தது. தெற்கில் பாண்டி யரும் திருவடி மரபினரும் மேற்கில் கெர்சப் போ, கர்க்கல் முதலிய பகுதிகளில் ஆட்சி செய்தவர்களும் மேலே கூறிய முறை யில் தான் செயற்பட்டார்கள்.

தமிழகம் சோழர் காலத்தில் இருந்ததைப் போல வளநாடு, நாடு, கூற்றம் என்னும் நிர்வா கப் பகுதிகளை உடையதாயிருந்தது. அது போலவே சோழர் காலத்து கிராம நிர்வாகமும் விஜயநகரப் பேரரசர்களின் காலத்தில் அழியா மல் காக்கப் பெற்றது கிராம சபைகள் முன் போலவே செயற்பட்டன தெலுங்கு நாட்டிலும், கன்னட நாட்டிலும் விஜயநகரப் பேரரசர்கள் குறைபாடற்ற முறையில் உருவாக்கியிருந்த கிராம நிர்வாக முறைகளைத் தமிழகத்தின் மீது அவர்கள் சுமத்தவில்லை.

ஆனால் , கிராம சபையின் நிர்வாக அதிகாரிகள் மைய அரசுடனும், அதனுடைய பிரதிநிதிகளுடனும் அதிகமாக இணைக்கப் பெற்றதால் சபையின் தன்னாட்சியுரிமை மிகவும் சுருங்கிப் போயிற்று.

நிர்வாகப் பிரிவுகளின் பெயர்களும், அவற்றின் நிர்வாகத்தை நடத்திய அலுவ லர்களின் பெயர்களும் அவ்வப் பகுதியின் வழக்கிற்கேற்ப மாறியிருந்தாலும், மைய அர சினால் நியமிக்கப் பெற்ற மாகாண ஆளுநர் அனைவருமே அவ்வப் பகுதியிலிருந்த இரா ணுவ முக்கியத்துவமுடைய கோட்டைகளின் இராணுவத் தலைவராய் இருந்தனர்.

பேராசிரியர்
க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

சாதாரணமான சிவில் அலுவலர்கள் அந்தப் பதவிக்கு நியமிக்கப் பெறவில்லை. மாகாணங்கள் அல்லது ராஜ்யங்களின் எல் லைகள் அவ்வப்போது தோன்றிய நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே இருந்தன.

பேரரசின் வடவெல்லையிலிருந்த பகுதி கள் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக் கும் இடையில் அடிக்கடி கைம்மாறிக் கொண்டே இருந்ததால், அவற்றின் எல்லைகளும் அடிக் கடி மாறிக்கொண்டே இருந்தன. ஆளுநர்களும் நாயக்கர்களும் ஊரில் இல்லாதபோது அவர் களுடைய இராணுவ மானி யங்களை அவர் களிடமிருந்து அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் ஆட்சிசெய்தார்கள். (தொடரும்)

# 2008 ஆம் ஆண்டிற்கான சிறந்த தொழில் முயற்சியாளர் விருது

## வடமாகாணத்திற்கான விருது பெறுவோர்

(யாழ்ப்பாணம்)


இலங்கை வர்த்தக தொழிற்துறை மன்றங்களின் சம்மேளத்தினால் வருடந் தோறும் நடத்தப்படும் சிறந்த தொழில் முயற்சியாளர் விருது வழங்கும் வைபவம் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடை பெற ஏற்பாடாகியுள்ளதுடன் விசேடமாக இம் முறை மாகாண மற்றும் தேசிய ரீதியாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்க அம்ச மாகும் .

அந்த வகையில், வடமாகாணத்திற்கான நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தினருடன் இணைந்து இலங்கை வர்த்தகத் தொழிற்துறை மன்றங்களின் சம்மேளனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மேற்படி நிகழ்வில் மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங் களுக்கான 2008 ஆம் ஆண்டிற்கான சிறந்த தொழில் முயற்சியாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விருது பெறுவோர் விபரம் வருமாறு ,


### யாழ்.மாவட்டம்



சின்னராஜா சத்தியசீலன் (ராஜா கிறீம் ஹவுஸ் - ஐஸ்கிறீம், உணவு மற்றும் பரிமாற்ற சேவைகள்)



கந்தையா சுந்தரலிங்கம் (வெஸ்ரா இன்டஸ்ரீஸ் - பழரச மற்றும் உணவு உற்பத்தி)




இலங்கநாதன் பாலசுந்தரம் (பாமினி கட்டட ஒப்பந் தகாரர்- நிர்மாணத் துறை)

### வவுனியா மாவட்டம்



கோகிலாதேவி அசோக்குமார் (கோபிதன் காமன்ஸ் - ஆடை உற்பத்தித்துறை)



கனகசபை உதயகுமார் (உதயன்ஸ் வேளாண் மற்றும் நீர்ப்பாசனம் - விவசாயத்துறை)

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் பெண்களுக்கான கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மகளிர் அபிவிருத்திநிலையம் வீட்டுவன் முறையால் பாதிக்கப்படும் பெண்கள் அவற் றிலிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் வகையில் கிராமிய மட்டத்தில் பெண்களுக்குப் பல கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்த 5 ஆம் திகதி நல் லூர் முருகன் சனசமூக நிலைய மாதர் சங்க அங்கத்தவர்களுக்கு பெண்களும் சட்டமும் என்ற தலைப்பில் நல்லூர் மாதர் சங்க அலு வலகத்தில் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

இக் கருத்தரங்கில் பெண்கள் தமக்குப் பாதுகாப்புத் தேடித்தரும் சட்டங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அத்துடன் வீட்டு வன்முறைச் சட்டம் தொடர் பாகவும் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பாக வும் நடைமுறையிலுள்ள சட்டங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.இதில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப் பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன், நல்லூர் மாதர் சங்கத் தலைவி திருமதி ஜெகதீஸன் நவநீதன், நல் லூர் தெற்கு கிராமசேவையாளர் இராம லிங்கம் இராகினி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். (6)

## கலந்துரையாடல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுடனான முக்கிய கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சபை மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் முக்கிய சில முடிவுகள் எடுக்கப்பட இருப்பதால் சனசமூக நிலைய பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள் ளுமாறு நிர்வாக உத்தியோகத்தர் செல்வி வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார்.(6-4-29)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான வாசுதேவநாணயக் காரவை வரவேற்கும் நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரப்படுவதையும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எஸ்.டர்சன மங்கல விளக்கேற்றுவதையும் மற்றும் வாசுதேவ நாணயக்கார மற்றும் அவரது யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி சி.மோகன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : வட்டு அஜீத்)

# யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து கெடுபிடிகள் தளர்த்தப்படலாம்?

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து கெடுபிடிகள் தளர்த்தப்படக்கூடும் என பிரபல ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொழும்புக்கு பயணங்களை மேற்கொள்ளும் பொதுமக்கள் பெரும் போக்குவரத்து கெடுபிடிகளை சந்திப்பதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான பயணக் கட்டுப்பாடுகளை விரைவில் தளர்த்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (6)

# சீனா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளுடன் விடுதலைப்புலிகள் கொண்டிருந்த தொடர்புகள் குறித்து எதிர்காலத்தில் விசாரணைகள்

(கொழும்பு)

சீனா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளுடன் விடுதலைப்புலிகள் கொண்டிருந்த தொடர்புகள் குறித்து எதிர்காலத்தில் ராஜதந்திர ரீதியில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாடுகள் விடுதலைப்புலிகளுக்கு உதவின என்பதற்கான சாட்சியங்கள் இதுவரை முன் வைக்கப்படவில்லை. இந்த நாடுகளில் இருக்கும் ஆயுத முகவர்கள் ஊடாக விடுதலைப்புலிகள் உதவிகளை பெற்றிருக்கக்கூடும் என நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார். விடுதலைப்புலிகள் சீனா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளிடம் இருந்து பெருமளவிலான ஆயுதங்களை பெற்றுக் கொண்டதாக தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் மேற்கூறிய நாடுகளுக்கான ராஜதந்திர சேவைகளுக்காக எதிர் காலத்தில் திறமையான அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதுடன் தற்போது இந்த நாடுகளில் உள்ள இலங்கை தூதரகச் சேவைகளில் மாற்றங் கள் செய்யப்படும் எனவும் அர சாங்கத்தின் உயர்மட்டப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (6-4)

# முல்லைத்தீவு யோகபுரம் பாடசாலை இன்று மீளத் திறக்கப்படவுள்ளது

(கொழும்பு)

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்று மீளத் திறக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் யுத்தம் உக்கிரமடைந்ததனைத் தொடர்ந்து குறித்த பிரதேச பாடசாலைகள் மூடப்பட்டன.

சுமார் ஆயிரம் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களுடன் இன்று யோகபுரம் பாடசாலையில் கல்விநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற சில மாணவர்கள் தொடர்ந்தும் இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய மீள்குடியேற்றப்பட்ட மாணவர்கள் இன்று முதல் கல்வியைத் தொடர உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலையில் சுமார் 250 ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதாகவும், இவர்களில் பலர் இடம்பெயர் முகாம்களில் தங்கியிருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இவர்கள் அனைவரும் கடமைக்குத் திரும்ப மிகுந்த ஆர்வத்துடன் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பிரதேசத்தில் சுமார் 52 பாடசாலைகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாவட்டச் செயலகத்தின் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அனைத்து ஊழியர்களும் பணிக்குத் திரும்பவேண்டும் எனவும் அவர்கோரிக்கை விடுத்துள்ளார். (6)

# பன்றிக்காய்ச்சல் நோய் காரணமாக கண்டியில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் பன்றிக் காய்ச்சல் நோய்த் தொற்றுக் காரணமாக உயிரிழந்த முதலாவது நபர் கண்டியில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

பன்றிக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட 16 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இளைஞரின் பெற்றோர் இருவரும் வைத்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எச் 1 என் 1 என்ற பன்றிக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் பன்றிக் காய்ச்சல் நோய் தொடர்பில் மக்கள் பீதியடையத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் வேறு உபாதைகளினாலும் பாதிக்கப்பட்டிருந்தாகவும் இதனால் இவரை நோய்த்தொற்று இலகுவில் தாக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பன்றிக்காய்ச்சல் நோய் அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதி பெற்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (6)

# விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு சொத்துக்கள் விரைவில் அரசுடமையாக்கப்படும்

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு சொத்துக்கள் விரைவில் அரசுடமையாக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான கப்பல்கள் கட்டடங்கள் வர்த்தக நடவடிக்கைகள் ஆகியவற்றை விரைவில் பறிமுதல் செய்து அரசுடமையாக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் கடந்த 30 ஆண்டுகளாக உழைத்த பணம் மற்றும் சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் சொத்துக்களை முடக்குவதற்குத் தேவையான சகல சர்வதேச சட்டத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் சர்வதேச தலைவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் சொத்து விபரங்கள் திரட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# கோல்டன் கீ முதலீட்டாளர்களின் பணம் மீளச் செலுத்தப்படவுள்ளது

## மத்திய வங்கி தகவல்

(கொழும்பு)

கோல்டன் கீ முதலீட்டாளர்களின் பணம் மீளச் செலுத்தப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் பணத்தை மீளச் செலுத்தும் பணிகளை ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மில்லியனுக்கும் குறைவான முதலீடுகள் தொடர்பில் கணக்காய்வு நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மில்லியன் ரூபாவிற்கும் குறைவான தொகையை முதலீடு செய்தவர்களுக்கு 75 வீத பணம் முதலில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ஆகக் கூடிய தொகையாக முதலில் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என மத்திய வங்கி அதிகாரி தெரிவித்துள்ளார். இதன்படி ஒரு மில்லியன் ரூபா வைப்புச் செய்த ஒருவருக்கு ஆகக்கூடிய தொகையாக ஒரு இலட்சம் ரூபா மட்டுமே கிடைக்கப் பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தின் கட்டளைகளுக்கு அமைவாக இந்த பண மீளளிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்படும் என மத்திய வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டம் கட்டமாக பண மீளளிப்பு நடைபெறும் எனவும் முதல் கட்டத்தில் ஒரு மில்லியனுக்கும் குறைவாக முதலீடு செய்தவர்களது பணம் மீளளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஆதரவளிக்கப்படும் ஜே.வி.பி. ஐக்கிய தேசியக் கட்சிக்கு உறுதி

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஆதரவளிக்கப்படும் என ஜே.வி.பி கட்சி ஐக்கிய தேசியக்கட்சிக்கு உறுதிமொழி வழங்கியுள்ளது.

எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து பொதுவான ஓர் வேட்பாளரை நியமிப்பதன் மூலம் மட்டுமே ஜனாதிபதிக்கு சவாலை விடுக்க முடியும் என ஜே.வி.பி சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஜே.வி.பி தனது ஆதரவை ஐக்கிய தேசிய முன்னணிக்கு வழங்குவது தொடர்பிலான அறிவிப்பை வெளியிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கும் காரணத்திற்கான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பினால் ஜனாதிபதியை தோற்கடிக்க முடியாது என ஆளும் கட்சியினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (6)

# ஒரே நாளில் இரண்டுத் தேர்தல்களை நடத்த முடியாது -தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)

ஒரே நாளில் இரண்டு தேர்தல்களை நடத்த முடியாதென தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களை ஒரே நாளில் நடத்தக் கூடிய சாத்தியம் கிடையாது என தேர்தல் திணைக்களம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளது.

வரலாற்றில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் ஒரே தடவையில் நடைபெற்றதில்லை என குறிப்பிடப்படுகிறது.

இதன்படி முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தவும் பின்னர் பொதுத் தேர்தலை நடாத்தவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டின் போது ஜனாதிபதி இதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது. (6)

# தனியார் பஸ் உரிமையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபையை மேம்படுத்தும் அதேவேளை தனியார் போக்குவரத்துச் சேவையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும். தனியார் பஸ் உரிமையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தையும் போக்குவரத்து அமைச்சு மேற்கொள்ளவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் போக்குவரத்து திருத்தச் சட்டமூலம் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது உரையாற்றுகையிலேயே அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.மேலும் அவர் கூறுகையில்,

நாட்டில் தனியார் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமே தவிர அதனை இல்லாதொழிப்பது எமது நோக்கமல்ல.

தனியார் பஸ் போக்குவரத்தை நடத்துவதற்கான வீதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இன்று ஏலம் விடும் முறை பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் பெற்றுக்கொள்ளப்படும் வருமானத்தில் சிசுதிரிய போக்குவரத்து திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் கோடீஸ்வரர்கள் அல்ல. எனவே, இ.போ.ச.வை பாதுகாப்பது போன்று தனியார் போக்குவரத்து சேவையையும் பாதுகாக்க வேண்டும். போக்குரத்து அமைச்சினால் வழங்கப் படும் புலமைப் பரிசில் திட்டம் தனி யார் போக்குவரத்து பஸ் உரிமையாளர் களின் பிள்ளைகளுக்கும் வழங்கப்படும் என்றார். (6)

### இறக்குமதி செய்யப்பட்ட

# 180க்கு மேற்பட்ட திரைப்படங்கள் தணிக்கை

(கொழும்பு)

இந்தியா, ஹொங்கொங், ஐரோப்பிய நாடுகளிலிருந்த இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள் இலங்கை தணிக்கைக்குழுவினரால் திரையிடப்பட்டு பார்த்த பின்னர் தணிக்கைக்கு உள்ளாகின்றன.

இவ்வாறு தாம் 180 படங்களுக்கு மேல் தணிக்கை செய்துள்ளதாகவும் இன்னும் 250 படங்களை தாம் திரையிட்டு பார்த்த பின்னர் வெளியிடுவதா இல்லையா என முடிவு செய்ய உள்ளதாகவும் தணிக்கைக் குழுவின் தலைவர் அஷோகா சேரங்கே கூறியுள்ளார்.

தணிக்கை செய்யப்பட்ட மலையாளம், இந்தி,சிங்கள மற்றும் ஆங்கிலப் படங்களை அவற்றின் உண்மையான பெயர்களுக்கு பதில் வேறு பெயர்களில் திரையிடுகின்ற திரையரங்கு உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்களின் சினிமாக்கள் சீல் வைக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (6)

### கலந்துரையாடலும் ஆலோசனைச்சபை கூட்டமும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபைக்கூட்டம் பிற்பகல் 3 மணிக்கும் சபை மாநாட்டு மண்டபத்தில் நிர்வாக உத்தியோகத்தர் செல்வி V.சிவக்கொழுந்து தலைமையில் நடைபெறவுள்ளது. (6-4-29)

# ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இழக்கப்பட்டால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் வீழ்ச்சியடையும்

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இழக்கப்பட்டால் சிறிய மற்றும் நடுத்தர ஆடை உற்பத்தி நிறுவனங்கள் மூடப்படும்.இதனால் வேலை வாய்ப்புகள் இல்லாதுபோகும்.இது கிராமப்புற மக்களை அதிகம் பாதிப்பதுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளும் வீழ்ச்சிகாணும் என ரொய்ட்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி.வர்த்தக வரிச் சலுகையை நீடிப்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள நிபந்தனைகளுடன் கூடியஅறிக்கைக்கு இலங்கை அரசு பதில் அனுப்பியுள்ளது.

இந்தத் தருணத்தில் ஜி.ஸ்.பி. வரிச்சலுகை தொடர்பான சில கேள்விகளையும், பதில்களையும் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. அவை வருமாறு,

*கேள்வி:-ஜி.எஸ்.பி. வரிச்சலுகை என்றால் என்ன?*

பதில்: அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிற்கான சலுகையாக அவற்றின் ஏற்றுமதிப் பொருட்கள் மீதான வரிக்குறைப்புத் திட்டமாகும். இதன்மூலம்அனைத்துலகத்தின் விதிமுறைகளை அந்தப் பிராந்தியங்களில் நடைமுறைப்படுத்துவதும் ஒரு நோக்கம்.

*கேள்வி:இலங்கை அதனை இழப்பதற்குரிய சாத்தியங்கள் உள்ளதா?*

பதில்: இலங்கைஅனைத்துலகத்தின் மனித உரிமை விதிகளை மீறியுள்ளதை ஐரோப்பிய ஒன்றியத்தின் விசாரணைகள் கண்டறிந்துள்ளன. எனவே இந்த நிலையில் இலங்கை இந்த வரிச்சலுகையை இழந்தால் அதனை மீண்டும் பெறுவது கடினம் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

*கேள்வி: இலங்கைக்கு ஏன் இது முக்கியமானது?*

பதில்: ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைப்பெறும் 16 நாடுகளில் இலங்கையும் ஒன்று.புடைவை ஏற்றுமதி இலங்கையின் முக்கிய வருமானங்களில் ஒன்று.

அதன் மூலம் 6 தொடக்கம் 7 சதவீதமான மொத்த வருமானத்தை அது பெற்று வருகின்றது.ஐரோப்பிய ஒன்றியமே இலங்கையின் பிரதான கொள்வனவாளர். இதன்மூலம் இலங்கை 116 மில்லியன் டொலர்களை சம்பாதித்து வருகின்றது. வரிச்சலுகை நிறுத்தப்பட்டால் ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்கள் அதிக விலைக்கே இலங்கையின் புடைவைகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இதனால் இலங்கையின் ஏற்றுமதி வீழ்ச்சியடையும்.

*கேள்வி: இலங்கை அதனை மீண்டும் பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டா?*

பதில்: ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை இலங்கை அரசு எதிர்வரும் சில மாதங்களில் நிறைவு செய்தால் அதனைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துதல்,20 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களை விடுதலை செய்தல், ஊடக சுதந்திரத்தைக் காப்பாற்றுதல் போன்றன இந்த நிபந்தனைகளில் அடங்கும் என இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

*கேள்வி : ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இழப்பதால் இலங்கையின் பொருளாதாரத்தில் என்ன பாதிப்பு ஏற்படும்?*

பதில்: சிறிய மற்றும் நடுத்தர ஆடை உற்பத்தி நிறுவனங்கள் மூடப்படும்.இதனால் வேலைவாய்ப்புக்கள் இல்லாது போகும். இது கிராமப்புற மக்களை அதிகம் பாதிப்பதுடன், இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளும் வீழ்ச்சி காணும்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதிக்கு அதிக கிராக்கி இருப்பதாக இலங்கையின் மத்திய வங்கி தெரிவித்துள்ளபோதும், தமது வாடிக்கையாளர்கள் ஏற்கனவே மலிவான புடைவை உற்பத்தி நாடுகளை நோக்கி நகர ஆரம்பித்து விட்டதாக புடைவை ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)






# பம்பலப்பிட்டி கடலில் கொலை செய்யப்பட்ட இளைஞரின் குடும்பத்துக்கு ரூபா 1 இலட்சம்

## அரசு கையளிப்பு

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டி கடலில் வைத்து அடித்துக் கொலைசெய்யப்பட்ட பாலவர்மன் சிவகுமார் (26) என்ற தமிழ் இளைஞரின் குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகைக்கான காசோலையை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ கொல்லப்பட்ட இளைஞரின் சகோதரரிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளார்.

தொழில், தொழில் பயற்சி பிரதியமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் ஏற்பாட்டிலேயே இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது. (6)

# லெபனானில் அரசியல் தீர்வு ; எதிர்க்கட்சிகள் ஒப்புதல்

(பெய்ரூட்)

லெபனான் அரசில் சேர்வதற்கு எதிர்க்கட்சியான ஹெஸ்புல்லா ஒப்புக்கொண்டது. இதன் மூலம் கடந்த ஐந்து மாதங்களாக நிலவி வந்த பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

புதிய அரசு குறித்த அறிவிப்பை பிரதமர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட ஹரிரி விரைவில் அறிவிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியான ஹெஸ்புல்லாவுக்கு இரண்டு அமைச்சர் பதவி அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

ஹெஸ்புல்லா என்றால் கடவுளின் கட்சி என்று பொருள். இந்த அமைப்பு சமூக சேவை மற்றும் பள்ளி, மருத்துவமனை, நிர்வாகம் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டுள்ளது. லெபனான் அரசியலில் மிகவும் வலிமை மிக்க சக்தியாக இது விளங்குகிறது.

லெபனானில் இஸ்ரேல் ஊடுருவிய போது அதைத் தடுக்கும் நோக்கில் ஒரு தீவிரவாத அமைப்பாக உருவானதுதான் ஹெஸ்புல்லா அமைப்பாகும். பின்னாளில் இது சமூக சேவைகளில் ஈடுபட்டாலும் இந்த அமைப்புக்கு அரபு நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

சிரியா ஈரான் ஆதரவிலான கட்சிகளின் ஒத்துழைப்போடு பிரதான கட்சியாக உருவெடுத்துள்ளது. ஹெஸ்புல்லா வெள்ளிக்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இதன் தலைவர் ஹஸன் நஸ்ரல்லா பங்கேற்று அரசில் சேர ஒப்புக்கொண்டார்.

லெபானானில் கடந்த ஜுன் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஆட்சியமைப்பதில் எதிர்க்கட்சியான ஹெஸ்புல்லா ஒத்துழைப்பு அளிக்காததால் அரசு அமையவில்லை. தற்போது அரசு அமைப்பதற்கு ஒத்துழைப்பு அளித்ததால் விரைவில் கூட்டு அரசு அமையும் வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது.

தற்போது பிரதமராக தேர்வு செய்யப்பட்ட ஹரிரிக்கு அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியா ஆதரவு தெரிவித்துள்ளன. 30 பேரடங்கிய அமைச்சரவையில் ஹரிரி தலைமையிலான உறுப்பினர்கள் 15 பேருக்கு அமைச்சர் பதவி அளிக்கப்படும் இதேபோல ஹெஸ்புல்லாவுக்கு 2 அமைச்சர்களும் அதிபர் மைக்கேல் சுலேமான் நியமனத்தில் 5 முக்கிய அமைச்சர்களும் நியமிக்கப்படவுள்ளன. முன்னதாக நிதியமைச்சர் பதவிக்கு ராயா ஹலுனை நியமித்தார். ஹரிரி ஆனால் அதை எதிர்க் கட்சிகள் ஏற்கவில்லை. தற்போது ஹெஸ்புல்லா அமைப்பு வெளியுறவுத்துறை அமைச்சர் பதவிக்கான நபரை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்து மாதங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து லெபானானில் அரசு அமையும் வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் நிம்மதியடைந்துள்ளனர். (6)

# முஷாரப்பிடம் விசாரணை நடத்த ஐ.நா. ஆணையகம் முடிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டது குறித்து முன்னாள் அதிபர் முஷாரப்பிடம் ஐ.நா. ஆணையகம் விசாரணை நடத்தவுள்ளது.

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான பெனாசிர் பூட்டோ கடந்த 2007ஆம் ஆண்டு ராவல்பிண்டியில் தேர்தலுக்கு முன்னதாக நடந்த பேரணியில் கலந்து கொண்ட போது தற்கொலைப் படை தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்து உள்ளூர் புலனாய்வு அமைப்புகள் விசாரித்தன. இருப்பினும் பெனாசிரின் கணவன் சர்தாரி ஐ.நா. ஆணையகம் விசாரிக்க வேண்டும் என கோரினார். தற்போது சர்தாரி பாகிஸ்தான் அதிபராக உள்ளார். இதையடுத்து ஐ.நா. ஆணைக்குழு பெனாசிர் பூட்டோவின் கொலையை விசாரிக்க திட்டமிட்டுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக முன்னாள் அதிபர் சர்தாரியிடம் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை செய்து தரும்படி பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகத்துக்கு ஐ.நா. ஆணையகம் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. முன்னாள் இராணுவ அதிகாரிகளிடமும் ஐ.எஸ்.ஐ. அதிகாரிகளிடமும் இந்த கமிஷன் விசாரணை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது. (6)

## பாகிஸ்தான் பள்ளியில் தீவிரவாதிகள் குண்டு வீச்சு

## ஆசிரியர்கள் மாணவர்கள் காயம்

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள குவாட்டா நகரில் ஜுனியர் பள்ளி உள்ளது. இது ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதியில் உள்ளது. இந்த பள்ளியின் மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் ஆசிரியர்கள் தங்கியிருந்த அறையும் பள்ளிக் கட்டடமும் சேதம் அடைந்தன. இந்த தாக்குதலில் 2 ஆசிரியர்களும் மாணவர்களும் காயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# உதவித் தொகை வழங்கக் கோரி ஜாக்சனின் தந்தை மனு தாக்கல்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

மைக்கேல் ஜாக்சன் எனக்கு பல ஆண்டுகளாக உதவி செய்து வந்தார். அவர் மரணம் அடைந்து விட்டதால் அவரின் எஸ்டேட் வருவாயில் இருந்து எனக்கு உதவித் தொகை வழங்க வேண்டும் என ஜாக்சனின் தந்தை ஜோஜாக்சன் லொஸ்ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். பொப் இசை உலகில் முடிசூடா மன்னனாக திகழ்ந்தவர் மைக்கேல் ஜாக்சன்.

கடந்த ஜுன் 25ஆம் திகதி திடீரென காலமானார். இவரது எஸ்டேட் வருவாய் இந்தாண்டு இறுதியில் 500 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவரது தந்தை ஜோ ஜாக்சன் (81) நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இவர் தன் மகனின் எஸ்டேட் வருவாயில் இருந்து உதவித் தொகை வழங்க வேண்டும் என அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது,

மைக்கேல் ஜாக்சன் இறப்பதற்கு முன்பு வரை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள எனக்கு உதவி செய்து வந்தார். மைக்கேல் ஜாக்சன் தன் தாய் கேத்தரீன் ஜாக்சனுக்கு பண உதவி செய்வார் . அதை அவர் எனக்கு கொடுப்பார். எனக்கு மாதம் 10 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஆனால் அமெரிக்க சமூக பாதுகாப்பு மூலம் மாதம் 85 ஆயிரம் ரூபாய் மட்டுமே கிடைக்கிறது.

எஸ்டேட் வருவாயில் இருந்து மைக்கேல் ஜாக்சனின் தாய் கேத்தரீனுக்கு உதவித் தொகை வழங்க அதன் நிர்வாகிகள் நீதிமன்ற அனுமதி கேட்டனர். ஆனால் அதிலிருந்து என் பெயரை எவ்வித தெளிவான காரணமும் இன்றி நீக்கி விட்டனர். மைக்கேல் ஜாக்சன் தன் எஸ்டேட் மூலம் தன் மூன்று குழந்தைகள் தாய் மற்றும் அறக்கட்டளை பயனடையும் வகையில் உயில் எழுதி வைத்துள்ளார்.

2000ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் மைக்கேல் ஜாக்சன் அவரது தாய் கேத்தரீன் ஜாக்சனுக்கு மாதம் 25 லட்சம் ரூபாய் வழங்கி வந்தார். பின்னர் மாதம் 33 லட்சம் ரூபாய் வழங்கி வந்தார். கேத்தரீன் ஜாக்சன் அந்த பணத்தின் ஒரு பகுதியை எனக்கு கொடுத்தது மைக்கேல் ஜாக்சனுக்கு தெரியும். தற்போது அந்த பணம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே எனக்கு உதவித் தொகை வழங்க வேண்டும் இவ்வாறு அந்த மனுவில் குறிப்பட்டுள்ளது. (6)

## பூகம்ப அபாயம்

# தலைநகரை மாற்ற ஈரான் திட்டம்

(டெகரான்)

ஈரான் நாட்டின் தலைநகரான டெகரானில் எதிர்காலத்தில் பேரழிவுகளை உண்டாக்கும் பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ளதாக நிலநடுக்க ஆய்வியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து அத்தகைய பேரழிவு வாய்ந்த நிலநடுக்கத்தில் இருந்து தன் மக்களை காப்பாற்ற தலைநகரை வேறு நகருக்கு மாற்றும் திட்டத்திற்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.




டெகரான் நகரில் எதிர்காலத்தில் ஏற்படும் நிலநடுக்கத்தால் பெரியளவில் உயிரிழப்புகள் ஏற்படுவதை தடுக்கும் முயற்சியாக இவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது. தலைநகரை வேறு இடத்தில் நிறுவும் திட்டத்தை அந் நாட்டின் தலைவர் அயதுல்லா அலி காமேனி முன்மொழிந்து அதற்கான கவுன்சிலிடம் ஒப்புதல் பெற்றார். ஆனால் தற்போது இருக்கும் நகரிலேயே ஒன்று தலைநகராக தேர்ந்தெடுக்கப்படுமா அல்லது புதிதாக நிறுவப்படுமா என்பது குறித்து தெளிவான தகவல்கள் இல்லை.

ஈரானின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அதற்கு பல்வேறு காலகட்டங்களில் இஸ்பாகான் குவாசின் சிராஸ் மஸ்காத் மற்றும் ஹமீதான் உட்பட பல்வேறு நகரங்கள் தலை நகரங்களாக இருந்துள்ளது. தெரிய வரும் கடந்த 1795ஆம் ஆண்டு மன்னர் அகாமுகமது கான் டெகரானை தலைநகராக அறிவித்தது. முதல் அந்நகர் நாட்டின் அரசியல் சமூக பொருளாதார மற்றும் கலாசார மையமாக திகழ்ந்து வருகிறது. தற்போது இந்நகரில் ஒரு கோடியே 20 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஈரான் நாட்டிற்கு புதிய தலைநகரை நிறுவுவது குறித்து 20 ஆண்டுகளுக்கு முன்னரே திட்டமிடப்பட்டது. 2003ஆம் ஆண்டு பாம் மாகாணத்தின் தென்கிழக்கு நகரில் ஏற்பட்ட பூகம்பத்தில் 40 ஆயிரம் பேர் வரை பலியானதையடுத்து அதிகாரிகள் தலை நகரை மாற்றும் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். (6)

# ரஷ்ய விமானமொன்று விழுந்து நொறுங்கியதில் 11 பேர் பலி

(மாஸ்கோ)

ரஷ்யா இராணுவ விமானம் ஒன்று பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது பசுபிக் கடலில் விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்தில் பயணம் செய்த 11 பேரும் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இது தொடர்பாக ரஷ்ய இராணுவ அமைச்சகம் கூறியுள்ளதாவது,

நீர் மூழ்கி கப்பல்களை கண்டறிந்து தாக்கும் திறன் கொண்ட இந்த டியு.142 ரக விமானம் பசுபிக் பெருங்கடலில் தார்தர் நீரிணையை ஒட்டிய பகுதியில் பறந்து கொண்டிருந்த போது திடீரென ரேடாரிலிருந்து காணாமல் போனது.

விமானம் விழுந்த இடம் ரஷ்யாவின் பிரதான பகுதியை சகாலின் தீவிலிருந்து பிரிக்கும் இடம் விமானத்தில் பயணம் செய்த 11 பேரும் பலியாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது. தொழில் நுட்பக் கோளாறு காரணமாகவே விமானம் விழுந்து நொறுங்கியிருக்கலாம். விமானத்தின் உடைந்த பாகங்கள் கடலில் மிதப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு ரஷ்ய அமைச்சகம் கூறியுள்ளது. (6)

# எதிர்மறையாக சிந்திப்பவருக்கு நினைவுத்திறன் அதிகரிக்குமாம்

## ஆய்வில் தகவல்

(சிட்னி)

நீங்கள் எந்த ஒரு விஷயத்தையுமே எதிர்மறையாக ஆக சிந்திப்பவரா அப்படியானால் உங்களின் நினைவுத்திறன் அதிகரிக்குமாம். அவுஸ்திரேலியாவில் நடத்திய ஒரு ஆய்வில் தான் இந்த ஆச்சரியமான விஷயம் தெரிய வந்துள்ளது.

எந்த ஒரு விஷயத்தையும் எதிர்மறையாக சிந்திப்பது உடலுக்கும் மனதுக்கும் ஆபத்தை விளைவிக்கும் என பலரும் கூறுவது உண்டு. நல்லதை நினைத்தால் நல்லது நடக்கும் என்றும் சிலர் கூறுவர். ஆனால் சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் இதற்கு நேர்மாறான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளன.

அவுஸ்திரேலியா நியூசவுத்வேல்ஸ் பல்கலையின் உளவியல் பேராசிரியர் ஜோசப் போர்காஸ் தனது குழுவினருடன் இணைந்து எதிர்மறையான சிந்தனை, நேர்மறையான சிந்தனைகளால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆய்வு ஒன்றை நடத்தினார். இதில் பல ஆச்சரியமான விஷயங்கள் தெரியவந்தன. அதில் கூறப்பட்டுள்ளதாவது ,

ஒரு விஷயத்தை பற்றி நேர்மையாக சிந்தித்தால் படைப்பு திறன் அதிகரிக்கும். ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணம் , விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் அதிகரிக்கும். அதே நேரத்தில் எதிர்மறையாக சிந்தித்தாலும் சில பயன்கள் கிடைக்கும். குறிப்பாக எதிர்மறையாக சிந்திக்கும் ஒருவர் எந்த விஷயத்திலுமே மிகவும் கவனமாக இருப்பார்.

முன் எச்சரிக்கையான சிந்தனைகளால் வெளி உலகத்தை பற்றிய கவனமும் பிரச்சினைகள் ஏற்பட்டால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற தீர்வும் கிடைக்கும். இப்படிப்பட்ட நபர்கள் நெருக்கடியான நேரத்தில் மற்றவர்களால் ஏமாற்றப்படுவதற்கான வாய்ப் பும் மிகவும் குறைவாகவே இருக்கும் நினைவுத்திறன் அதிகரிப்பதோடு மற்றவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை சரியாக யூகிக்க முடியும் . இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இன்று ஒரு தகவல்

## தனிச் சிறப்பு

ஒரு பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அதில் பேச்சாளர் ஒருவர் பேசுவதற்கு ஆயத்தமாகினார். அதற்கு முன் ஒரு புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டைத் தன் கையில் எடுத்து, அதை எல்லோருக்கும் தெரிவது போல் உயர்த்திப் பிடித்தார்.

அந்தக் கூட்டத்தில் சுமார் 200 பேர்வரையில் உட்கார்ந்திருந்தனர்.

அவர் எல்லோரையும் பார்த்து, “இந்த நூறு ரூபாய் நோட்டை விரும்புபவர்கள் யார்?” என்று கேட்டார்.

அவ்வளவுதான்!

அவ்வளவு பேரும் கையைத் தூக்கினார்கள்.

“இந்த நூறுரூபாய் நோட்டை உங்களில் ஒருவருக்குக் கொடுக்கப் போகிறேன். ஆனால் அதற்கு முன் ஒரு காரியம் செய்யப் போகிறேன்” என்று சொல்லிவிட்டு அந்த நோட்டைக் கையால் கசக்கினார்.

பின் அந்தக் கசங்கிய நோட்டை எடுத்து, “இப்போது இதை விரும்புவர்கள் யார்?” என்று வினவினார்.

தூக்கிய கையை யாருமே இறக்கவில்லை. அப்படியே வைத்திருந்தார்கள்.

பேச்சாளர் பார்த்தார்.

“சரி... இப்படிச் செய்தால் என்ன?” என்று சொல்லிவிட்டு அந்த நோட்டைக் கீழே போட்டு தன்னுடைய பூட்ஸ் காலால் அதை மிதித்தார். அப்படியும் இப்படியுமாக அதைத் தேய்த்தார்.

இப்போது அந்த நோட்டு கசங்கியிருந்தது.

கசங்கிய நோட்டை எடுத்து, இப்போது சொல்லுங்கள்...” இப்போது இதை விரும்புவர்கள் யார்?” என்று கேட்டார்.

தூக்கிய கைகள் தூக்கியது தான். யாருமே கீழே இறக்கவில்லை.

இப்போது அந்தப் பேச்சாளர் பேசத் தொடங்கினார். “அருமை நண்பர்களே! இப்போது நீங்கள் அனைவரும் நல்ல பாடமொன்றைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இந்தப்பணத்தை நான் கசக்கினேன். காலில் போட்டு மிதித்தேன். ஆதலால் அழகாக இருந்த நோட்டு இப்போது அசிங்கமாகிவிட்டது. இந்தப் பணத்தை நான் என்ன செய்தாலும் சரி... நீங்கள் தொடர்ந்து அதை விரும்புகிறீர்கள். அதற்கு என்ன காரணம்?

அது அதனுடைய மதிப்பில் குறையவில்லை... அப்போதும் அதனுடைய மதிப்பு நூறு ரூபாய்தான். இப்போதும் அதனுடைய மதிப்பு நூறு ரூபாய் தான்.

நம்முடைய வாழ்க்கையிலும் நாம் எடுக்கும் முடிவுகள், ஏற்படும் சூழ்நிலைகள் போன்றவற்றால் நாம் கசக்கப்படுகிறோம். மிதிக்கப்படுகிறோம். அழுக்காகி விடுகிறோம். அப்போது நாம் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறோம்?

“நாம் எதற்கும் லாயக்கில்லை. நமக்கு மரியாதை இல்லை என்று நினைக்கிறோம்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? ஏற்கனவே எது நடந்திருந்தாலும் இனிமேல் எது நடக்கப் போவதாக இருந்தாலும் அதனால் நம்முடைய மதிப்பில் நாம் குறைந்து விடப்போவதில்லை.

துன்பம் வரும்போது மதிப்புக் குறைந்துவிட்டதாக நினைத்து யாரும் மனமுடைந்து போய்விடாதீர்கள்.

நீங்கள் ஒரு தனித்தன்மை உள்ளவர். உங்களிடம் ஒரு தனித்துவமும் உண்டு. அது மற்ற யாரிடமும் இருக்காது. இந்த உண்மையை நீங்கள் மறந்துவிடாதீர்கள்.

நாளைய எதிர்பார்ப்புகளை நேற்றைய ஏமாற்றங்கள் அமுக்குவதற்கு இடம்கொடுத்து விடாதீர்கள். Never let yesterdays disappointments over shadow tomorrows dreams.

ஆகக்கூடி, நாம் வாழ்க்கையை சரியாகப் புரிந்து கொண்டால் சங்கடமில்லை. நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் நம்முடைய மதிப்பைக் குறைத்து விடுவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று அந்தப் பேச்சாளர் சொல்லிமுடித்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தரம் 6 முதல் 11 வரையான பாடப்புத்தகங்களை இணையத்தில் வெளியிட நடவடிக்கை

(கொழும்பு)

தரம் 6முதல் 11 வரையான அனைத்துப் பாடப்புத்தகங்களையும் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.என்.ஜெ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

8ஆம் தரத்திற்கான அனைத்துப் பாடப் புத்தகங்களும் ஏற்கனவே இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளதாகவும் தரம் 10 மற்றும் 11 இற்கான பாடப் புத்தகங்களை இணையத்தளத்தில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார்.

இதேவேளை அடுத்த வருடம் தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆட்சேபனை மற்றும் மேன் முறையீடு பரிசீலனைக் குழு இன்று தனது கடமைகளை ஆரம்பிக்கவுள்ளது எனவும் இதற்கமைய ஆட்சேபனை மற்றும் மேல்முறையீடுகளை சமர்ப்பித்துள்ள பெற்றோருக்கு விரைவில் அழைப்புக் கடிதங்கள் கிடைக்குமெனவும் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் ஸ்ரீலால் நோனிஸ் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான தே.அ.அட்டைகளை விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விசேட கருமபீடம் எதிர்வரும் 15 ஆம்திகதிவரை தொழிற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் ஆரம்பம்முதல் கடந்தமாதம் 15 ஆம்திகதிவரை ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 841 மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 76 ஆயிரத்து 104 அடையாள அட்டைகள் விநியோகிக் கப்பட்டுள்ளதாகவும் மிகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதாகவும் அவற்றை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (6)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 12,13 இற்கு கணக்கீடு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புள்ளித்திட்டம் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் புதன்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் குறித்த ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6-4-19)

## இராசி பலன்

09.11.2009
(ஐப்பசி 23 திங்கட்கிழமை)
சப்தமி பிற்பகல் 1.00 மணிவரை
பூசம் பிற்பகல் 12.48 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம் சுபசெலவு, முயற்சி தாமதம், தாய்வழி உறவு. |
| இடபம் | அந்நியர் சந்திப்பு,மனோ தைரியம், தனவருவாய், போசனசுகம். |
| மிதுனம் | போசன சுகக்குறைவு, விவாதம், முயற்சி தாமதம், தனவிரயம். |
| கடகம் | வெகுமானம், நல்ல வரவேற்பு, போசனசுகம், புதிய சிந்தை. |
| சிங்கம் | தொழில் நன்மை, சோம்பல் நிலை, பிரயாண நன்மை, சயன சுகக்குறைவு. |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி,நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம். |
| துலாம் | தொழில் மேன்மை, நண்பர்கள் உதவி,பொருள் சேர்க்கை, மன மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | உத்தியோகபங்கம்,எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, குடும்பக் கவலை. |
| தனுசு | முழங்கால் வலி, பொருள் விரயம்,போசனசுகம்,தொழில் நன்மை. |
| மகரம் | மனோதைரியம்,தேகநலன், காரியநன்மை, நிலை மாற்றம். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சத்துருஜெயம், தொழில்நன்மை, ஜனவசியம். |
| மீனம் | அஜீரண ரோகம், கௌரவக் குறைவு, காரியஇடையூறு, தன விரயம். |

வள்வன்

# கடவுச் சீட்டுக்களில் புதிய தொழில்நுட்பம்

## குடிவரவு,குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்களில் இடம்பெறும் மோசடிகளைத் தடுக்கும் நோக்கில் புதிய தொழில்நுட்பத்தை உபயோகிக்க தீர்மானித்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு ஆணையாளர் பி.வி. அபயகோன் தெரிவித்துள்ளார்.

புதிதாக வழங்க உத்தேசித்துள்ள கடவுச் சீட்டுக்களில் அதன் உரிமையாளர்களின் கைவிரல் அடையாளங்கள் உட்பட மேலதிக தகவல்களும் பதியப்படும். இதன் மூலம் ஆள்மாறாட்டம் மற்றும் மோசடிகளை தடுக்க முடியுமென ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

தற்சமயம் நாளாந்தம் சராசரியாக 10 கடவுச்சீட்டு மோசடிகள் குறித்து தமது திணைக்களத்திற்கு தெரிய வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை முன்னெப்போதும் இல்லாதவகையில் தற்சமயம் நாளாந்தம் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட புதிய கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவிற்கான உத்தியோக பூர்வ விஜயத்தை நிறைவு செய்துவிட்டு நாடு திரும்பியுள்ள ஆணையாளர் பி.வி.அபயகோன் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முனைந்தவர்கள் குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளார். (6-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 75 | 90 | 60 |
| தக்காளி | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 35 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 60 | 60 | 80 |
| பூசணி | 15 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 75 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 110 | 140 | 140 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 200 | 240 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# அவுஸ்திரேலியப் பொலிஸாரை இலங்கையில் நிலை நிறுத்த முடிபு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பொலிஸார் இலங்கையில் நிலை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சட்டவிரோத குடியேற்றக்காரர்களினால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

கொழும்பில் அவுஸ்திரேலிய பொலிஸாரை நிரந்தரமாக நிலை நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்களை தடுக்கும் அவுஸ்திரேலியாவின் முயற்சிகளுக்கு வெளிவிவகார அமைச்சு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையர்கள் எவ்வாறான வழிகளைப் பயன்படுத்தி அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கின்றனர் என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளது.

இலங்கை அகதிகள் அடிக்கடி படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் அரசியல் தஞ்சம் கோரி பிரவேசிக்க மேற்கொள்ளும் முயற்சிகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந.5)



கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய முத்தமிழ் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தென்மராட்சி கல்வி வலய தமிழ்பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சின்னத்துரை, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நிதி உதவியாளர் பொன்.தர்மேந்திரா ஆகியோரை வித்தியால மாணவர்களால் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# ருபெல்லா தடுப்பூசி மாதிரிகள்
# மேலதிக பரிசோதனைகளுக்காக அவுஸ்.இரசாயன ஆய்வுகூடத்துக்கு
## சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற ருபெல்லா தடுப்பூசியை மேலதிக பரிசோதனைகளுக்காக அவுஸ்திரேலிய இரசாயன ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பிட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டதன் பின்னர் இரண்டு சிறுமிகள் உயிரிழந்த சம்பவங்களைக் கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதன் பிரகாரம் ருபெல்லா தடுப்பூசியின் மாதிரிகளை அவுஸ்திரேலியாவின் கன்பராவில் அமைந்துள்ள இரசாயன ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அந்த மருந்தின் தரத்தை உறுதிப் படுத்திக் கொள்வதே இதன் நோக்கம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆய்வு கூடம் உலக சுகதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு கூடம் என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை ருபெல்லா தடுப்பூசி ஏற்றப்பட்டதன் பின்னர் இரண்டு மாணவிகள் உயிரிழந்தமை தொடர்பாக புத்தி ஜீவிகள் குழுவினரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அறிக்கை விரைவில் சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதனைத் தவிர உயிரிழந்த சிறுமிகளின் உடற்பாகங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு அறிக்கைகளும் கிடைத்தவுடன் அவற்றை ஆராய்ந்து இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவுக்கு விளக்கமளித்தாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6-3)




ஞானக்குழந்தை பாலர் கல்விக் கழகத்தின் ஆசிரியர் தின நிகழ்வில் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன், செயலாளர் திருமதி தெ.இரத்தினகோபால், பொருளாளர் பொ. சுதீசன் மற்றும் கழக உறுப்பினர்கள், கழக ஆசிரியர்கள் ஆகியோரை படத்தில் காணலாம்.

# கண்ணிவெடி அகற்றப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள மக்களும் மீள்குடியமர்த்தப்படுவர்
## பிரான்ஸ் மனித உரிமைகள் ஆணையாளரிடம் அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதந்துள்ள பிரான்சின் மனித உரிமைகள் ஆணையாளர் பிறைன்கோ சிமறி மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிசாட்பதியுதினைச் சந்தித்துள்ளார்.

இதன் போது அமைச்சினால் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக விரிவாக தெளிவூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது நிலக்கண்ணி வெடி அகற்றப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள மக்களும் மீள் குடியமர்த்தப்படுவர் என பிரான்ஸ் மனித உரிமைகள் ஆணையாளரிடம் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் உள்ளக இடப்பெயர்விற்கு உள்ளான மக்களிற்கான மனிதாபிமான உதவிகளை அதிகரிக்கவுள்ளதாக பிரான்ஸ் மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(6-14)



சந்திரபுர ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மனித மேம்பாட்டுச் செயலமர்விற்கு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வைத்திய கலாநிதிகளான ஆர்.கணேசமூர்த்தி, ஆர்.சிவசங்கர் மற்றும் வித்தியாலய முதல்வர் மு.பாலசுப்பிரமணியம், துணைமுதல்வர் அரியராசா, சாரண ஆசிரியர் எஸ்.சிவதாசன் ஆகியோர் வித்தியாலய சாரண மாணவர்களால் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# வவுனியாவிலுள்ள சிலமுகாம்களை நிரந்தரமாக்கும் முயற்சியில் அரசு
## ஜெனீவா, லண்டன் அதிகாரிகளுக்கு ஜயலத் எம்.பி.விபரிப்பு

(கொழும்பு)

ஜெனீவா மற்றும் லண்டனுக்கு எதிர்க்கட்சித் தலைவரின் விசேட பிரதிநிதியாக இருவாரகால விஜயமொன்றை மேற் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன அங்கு பல்வேறு தரப்புக்களையும் சேர்ந்த முக்கியஸ்தர்களை சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து விளக்கமளித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து வவுனியா அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களின் சுதந்திர நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கையில் அரசியல் அமைப்புக்கும் ஐ.நா.வின் மனித உரிமைகள் சாசனத்திற்கும் முரணான வகையில் அந்த மக்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் வவுனியாவில் உள்ள சில முகம்களை நிரந்தரமாக்கும் முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அசவர் தெரிவித்தார்.


இந்த விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு அவர்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தி அவர்களின் சுதந்திரமான கௌரவமான வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

அண்மைக்காலமாக இலங்கையில் பத்திரிகையாளர்கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிகாட்டிய அவர் 19 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் விபரித்தார்.

ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உயரதிகாரிகள் பிரித்தானிய பிரதமரின் விசேட பிரதிநிதி ஆகியோரையும் அவர் சந்தித்து பேசியுள்ளார்.

(6)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்மராட்சிகல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. இரவிச்சந்திரன் வித்தியாலய பிரதி அதிபர் திருமதி ஜெ.செல்வராணிக்கு பதக்கம் அணிவிப்பதை படத்தில் காணலாம்.



ஒன்றோடொன்று சண்டை செய்யும் நாய்கள் ஓநாய்க்கு எதிராக ஒன்றுபடுகின்றன..

– அர்மீனியா

வலம்புரி

## ரணில் விக்கிரமசிங்கா 2-வது தடவையும் தோற்றால்...?

ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கவுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து இறக்கிவிட வேண்டும் என்பதில் எதிர்கட்சிகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிடுவது சுலபம். ஆனால் அவரை வெற்றி கொள்வதாயின் அவருக்கு இணையான–யுத்த வெற்றியில் பங்குடைய ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும்.

அவ்வாறாயின் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை நிறுத்துவதே ஒரே வழி.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு சரத் பொன்சேகாவை கேட்டால், அவர் அதனை நிராகரிக்கப் போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டி போட்டு வெற்றி பெறாவிட்டாலும் அரசு மீது கொண்டுள்ள வெறுப்பை கொட்டித் தீர்ப்பதற்கு ஜனாதிபதித் தேர்தல் நல்ல சந்தர்ப்பம் என்ற நிலையில், தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜெனரல் சரத் பொன்சேகா பூரண சம்மதத்தை தெரிவிப்பார்.

அப்படியானால் வேறு என்ன தடை உள்ளது என்றால், இங்குதான் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் வகிபங்கு முன்னெழுந்து நிற்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டவர் ரணில் விக்கிரமசிங்கா.

தோல்வி பெரிதாக இல்லை, சுமார் ஒரு லட்சம் வாக்குகளின் பற்றாக்குறையினால் தோல்வியைச் சந்திக்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டிருந்தது.

அதற்கு தமிழ் மக்கள் வாக்களிக்காமையே காரணம் என்று நியாயம் கூறப்பட்டது.

தற்போது தமிழ் மக்களின் வாக்கு தனக்குக் கிடைக்கும் என ரணில் நினைக்கின்றார்.

அதே நேரம் முன்னர் வாக்களித்த சிங்கள மக்கள் தனக்கு இம்முறையும் வாக்களிப்பார்கள். எனவே வெற்றிக்கான சந்தர்ப்பம் உண்டு என ஏழைமனம் ஊசல் ஆடுகிறது.

நிலைமை இதுவாக இருக்க ரணில் விக்கிரமசிங்க விட்டுக்கொடுத்தாலன்றி ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது சாத்தியமானது அல்ல.

இங்கு தான் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு–ரணிலின் தியாகம் என்பன முக்கிய தேவையாக இருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாது விட்டுக் கொடுத்தால் ஐக்கிய தேசியக்கட்சியின் மீதான தனது ஆதிக்கம் வீழ்ச்சி கண்டுவிடும் என ரணில் நினைப்பதில் எந்தத்தவறும் இல்லை.

ஆனால் இரண்டாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைச் சந்தித்தால் ரணிலின் அரசியல் வாழ்வு முழுமையாக அஸ்தமனமாகி விடும் என்ற உண்மை அவரின் சிந்தையில் விழத்தான் செய்யும்.

இதில் எடுக்கும் தீர்க்கமான முடிபில்தான் ரணிலின் அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது.

# மங்காப் புகழ் படைத்த பேராசிரியர் துரைராஜா

## நாளை அவரின் பிறந்த தினம்

பேராசிரியர் அழகையா துரைராஜா இப்போது இருந்திருந்தால் அவருக்கு வயது 75. தமது ஐம்பத்தொன்பதாவது வயதில் 11.06.1994இல் அவர் மறைந்தார். அவர் மறைந்து 14 வருடங்கள் கடந்தும் பேராசிரியர் அழகையா துரைராஜா என்னும் அவர் நாமம் இன்றும் வாழ்கிறது. அவர்புகழ் இன்றும் மங்காச் சுடராக ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது.

நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பேராதனை பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீடத்தின் பீடாதிபதி பதவியை துறந்து, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை பொறுப்பேற்றார். அன்று முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தியை இலட்சியமாகக் கொண்டு பல கட்டுமானங்களை உருவாக்க விழைந்தார். கிளிநொச்சியில் விவசாய பீடமொன்றினை உருவாக்கியமையும் முறிகண்டியில் பொறியியற் பீடம் ஒன்றினை அமைக்க பல்கலைக்கழக ஆணைக்குழுவிலிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டமையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தை ஆரம்பித்து வைத்தமையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்துறை, தொழிலாளர் கல்வி, புறநிலைப்படிப்பலகு என்பவற்றை உருவாக்கியமையும் வறிய மாணவரின் கல்வி மேம்பாட்டுக்காக துணைவேந்தர் நிதியம் ஒன்றை ஆரம்பித்தமையும் பேராசிரியர் துரைராஜாவின் எதிர்காலவியல் அடிப்படையிலான தூரநோக்கை காட்டுகிறது.

பேராசிரியர் துரைராஜா அவர்கள் தமது பொறியியல் துறை சார்ந்த நிபுணத்துவத்துடன் கூடிய வாண்மையாளராக மாத்திரமின்றி சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். நெருக்கடியான காலகட்டத்தில் வடமராட்சியிலுள்ள தனது வீட்டிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு சைக்கிளில் சென்று வந்து பிறருக்கு முன்மாதிரியாக திகழ்ந்து அந்த நெருக்கடியான காலகட்டத்தின் சவால்களை ஏனையோரும் எதிர்கொள்ள துணை நின்றார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பெண் ஊழியர்களும், பெண் விரிவுரையாளர்களும் கூட இச்சவால்களை எதிர்கொண்டனர். அதேவேளை, தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட சகல பீடங்களையும் துறைகளையும் ஒருங்கிணைத்து அரவணைத்துச் சென்றதோடு, மாணவர்களிடையேயும் அமைதியை நிலை நாட்டினார்.

பேராசிரியர் துரைராஜா சிறந்த ஆய்வாளராகவும் விளங்கி புதிய கோட்பாட்டையும் உருவாக்கினார். பொறியியற் துறைசார்ந்த சர்வதேச மாநாடுகளிலும் பங்குபற்றி தமது துறைசார் நிபுணத்துவத்தை நிறுவி நமது நாட்டுக்கு புகழீட்டி தந்தார். பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை பல்வேறு மகாநாடுகளில் படிப்பதற்கென இவர் எழுதியுள்ளார். மண்ணியல் தொடர்பான நிபுணத்துவ ஆலோசனைகளையும் அவ்வப் போது வழங்கி வந்தார். பிறநாட்டு பல்கலைக்கழகங்களிலும் வருகை விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.

இக்கட்டான காலகட்டத்தில் உடல் வருத்தத்தையும் பாராது தமிழர் அபிவிருத்திக்காக உழைத்த வேளையில், உடல் நலம் பாதிப்படைந்த நிலையிலும் பேராசிரியர் துரைராஜா அவர்கள் தனது கடமைகளிலிருந்து வழுவாது அவற்றை மேற்கொண்டார்.

எளிமையானவராகவும் பழக இனியவராகவும் விளங்கி எல்லோருடைய மனங்களையும் அவர் கவர்ந்தார்.

எவரையும் வசீகரித்த அவரது புன்னகை என்றும் மறக்கக் கூடியதன்று. இதனாலேயே அவர் இன்றும் எம் எல்லோர் மனங்களிலும் வாழ்கிறார். அவரின் மங்காப் புகழ் இன்றும் சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

கலாநிதி த.கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சட்டவிரோத குடியேற்றவாசிகள் குறித்து இலங்கை - அவுஸ். அதிகாரிகள் கொழும்பில் இன்று பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றவாசிகள் மற்றும் ஆட்கடத்தல் விவகாரம் குறித்து அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கிடையிலான உயர் மட்டப் பேச்சுவார்த்தை இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பில் குறிப்பாக அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரி படகு மூலம் வரும் இலங்கையர்கள் தொடர்பாக இப்பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத குடியேற்ற வாசிகள் அதிகமாக வரும் நாடென்பதில் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கை முந்திக்கொண்டு இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளதாக கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூர்தரக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அண்மையில் 39 இலங்கையர்களை ஏற்றிக்கொண்டு அவுஸ்திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு கவிழ்ந்ததில் 12 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஜனாதிபதித் தேர்தல்களின் போது அதிர்ச்சியான தீர்மானங்கள் எடுக்கப்படும்

### எதிர்க்கட்சி வட்டார தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது யாரும் எதிர்பார்க்காத இரண்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதுடன் முதலாவது தீர்மானம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தத் தீர்மானம் அரசியல் வட்டாரத்தை மட்டுமன்றி நாட்டு மக்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் பிரசாரப் பணிகளின் இடை நடுவில் மற்றுமொரு பாரிய திருப்பம் ஏற்படுத்தப்படும் என எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

எனினும் இந்தத் தீர்மானங்கள் தொடர்பில் தற்போதைக்கு எதனையும் தெரிவிக்க முடியாது என குறிப்பிடப்படுகிறது.

இந்தத் தீர்மானங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பெரும் சாவாலை ஏற்படுத்தக் கூடும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால் இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான்என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே உயர்ந்த ஓர் இலட்சியத்தை கொண்டிருப்பது மேலானது.

மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கிறான். அதில் அவன் பல தவறுகளைச் செய்கிறான். ஆனால் துன்பப்படுகிறான். ஆனால் இறுதியில் அவன் இயற்கையை வென்று தனது சுதந்திரத்தைப் பெறுகிறான். அவன் சுதந்திரத்தை அடைந்தவுடனே இயற்கை அவனுக்கு அடிமையாகி விடுகிறது.

## எதிர்க்கட்சிகளுடன் இரகசியத் தொடர்புகளை பேணும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளுடன் இரகசியத் தொடர்புகளைப் பேணி வரும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் எச்சரிக்கை விடுத்துள்ளதாக பிரபல சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த அமைச்சர்களுக்கு ஜனாதிபதி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர் காலத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனான தொடர்புகளின் போது நிதானமாக செயற்படுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர ஆகியோருடன் சில அமைச்சர்கள் தொடர்புகளைப் பேணி வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த அமைச்சர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## பாதாள உலகக் குழுவொன்றின் தலைவர் தனுஸ்க சுட்டுக்கொலை

(கொழும்பு)

குருணாகலில் தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கொலைகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக குற்றஞ் சுமத்தப்பட்டிருந்த கொழும்பிலுள்ள முன்னணி பாதாள உலகக் குழுவொன்றின் தலைவர் எனக் கூறப்படும் தனுஸ்க என்பவர் வெல்லவஹிரி பிட்டிய பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பில் செயற்பட்ட பிரபல பாதாள உலகத் தலைவர் எனக் கூறப்படும் பிரின்ஸ் கொலமிஸ் என்பவரின் சகா எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். (6)

## ஏறாவூரில் இளம் குடும்பப் பெண் கழுத்து வெட்டிப் படுகொலை

(கொழும்பு)

ஏறாவூர் பிரதேசத்தில் இளம் குடும்பப் பெண்ணொருவர் இனந்தெரியாத நபர்களினால் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மீராக்கேணியைச் சேர்ந்த செய்யது மொகமது ரபீனா (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ள இப்பெண்ணின் சடலம் நேற்று காலை தாமரைக்கேணி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி பெண்ணின் கணவர் வாகன விபத்தில் காயமடைந்து ஹபரணை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இறுதியாக இப்பெண் கடந்த வெள்ளிக்கிழமை கணவனைப் பார்க்கச் செல்வதாக கூறி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் உறவினர்களின் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இப் பெண் பாலியல் வன்முறைக்குட்படுத்திய பின்பே படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

மட்டக்களப்பு நீதவான் வீ.இராமக்கமலன் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டு மரண விசாரணையினை மேற்கொண்டார்.

பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிப்பது என்ற உத்தரவையும் பிறப்பித்த அவர் தொடர்ந்தும் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபர்களை கைது செய்து நிதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தும் உத்தரவையும் பொலிஸாருக்கு பிறப்பித்தார். (6)

# சேதன விவசாய அபிவிருத்திக்கென தனிநோக்கு கூ.சங்கங்கள் உருவாக்கப்படுவது காலத்தின் தேவையாகும்

எமது சமுகத்தின் பெரும்பகுதியினரின் குடும்ப பின்னணிகள் விவசாயத்துடன் பின்னிப் பிணைந்திருந்தாலும் தற்காலத்தில் 'தோட்டக்காரன்' என்ற சொல்லைக் கேட்டவுடன் கொடுப்புக்குள் சிரிக்கும் அளவுக்கு எமது சமூக நாகரிகம் வளர்ச்சியடைந்துள்ளது. இருந்த போதிலும் அந்த தோட்டக்காரன் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை நம்பியே நாம் உயிர் வாழ்கின்கிறோம் என்ற யதார்த்த நிலைமையை நாம் உணரவில்லை.

அதேபோன்று தான் 'கூட்டுறவு' என்ற வலுவான சொல்லின் நிலைமையும் ஆட்பட்டு இருக்கின்றது என்பது வேதனைக்குரிய விடயமாகும். அதற்கான காரணங்களை ஆராய்ந்தோம் என்றால் சுய உதவி ,பரஸ் பர உதவி என்ற கூட்டுறவின் தாரக மந்திரத்தை மறந்து ஜனநாயகம் என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு நமது சுய நலத் தேவைக்காக ஒரு சிலர் கூட்டுறவை பயன்படுத்துவதனால் வந்த நிலை எது எப்படியாக இருந்தாலும் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' 'ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு' என்ற முதுமொழிகள் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியவைதான்.

கூட்டுறவும் விவசாயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டவை. அதனை நாம் பிரித்துவிட முடியாது. உலகளாவிய கூட்டுறவு வரலாறுகளை எடுத்துக்கொண்டாலே நாம் அதனை புரிந்துகொள்ளமுடியும்.

கைத்தொழில் புரட்சியினால் 19 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட உணவுப் பிரச்சினையே அங்கு கூட்டுறவு இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கும் அவை பின்னர் நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்களாக மாறுவதற்கும் வழி அமைத்துக்கொடுத்தது. இதேபோன்று தான் இலங்கையின் கூட்டுறவு வரலாற்றை பார்ப்போமானால் முதல் முதலாக உருவாக்கப்பட்ட கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக கிராமிய விவசாய மக்களுக்கு கடன் வழங்குவதை இலகுவாக முன்னெடுப்பதற்கு ஏதுவாகவே தோற்றுவிக்கப்பட்டது.

முதலாவது கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் மாத்தறை மாவட்டத்தில் வெல்லப்பட பத்து என்ற கிராமத்தில் 1912ஆம் ஆண்டு முதலாவது பதிவுக்குட்படுத்தப்பட்டது.

1913ஆம் ஆண்டு விவசாய இலாகாவின் பணிப்பாளர் கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளராக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் நாட்டின் பல கிராமங்களிலும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் (கடன் வழங்கு சங்கங்கள்) தோற்றுவிக்கப்பட்டன.

அந்த வகையில் 1916 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேசத்தில் முதலாவது ஐக்கிய நாணய சங்கம் பதியப்பட்டது. இப்படியாக இலங்கையின் 'கூட்டுறவு விவசாய' வரலாறுகள் ஒன்றிணைந்து நீண்டு செல்கின்ற இந்நிலையில் இரண்டாம் உலக மாகாயுத்தம் 1945ஆம் ஆண்டு முடிவடைந்ததும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகள் எமது நாட்டு மக்களையும் பாதித்தது.

இதிலிருந்து எமது பொருளாதாரத்தை மீட்டு எடுப்பதற்கு விவசாய , கால்நடை , மீன் பிடி, கைத்தொழில் போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக 1947ஆம் ஆண்டு விளைபொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டது. இவைகள் கிராமிய மட்டத்தில் விஞ்ஞான ரீதியான பயிர் செய்கை முறைகளை விருத்தி செய்தல், நவீன விவசாய கருவிகள் வழங்குதல், சிறந்த விதை தானியங்களை வழங்குதல், சிறந்த கால்நடைகளை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகளை சுய உதவி, பரஸ்பர உதவி என்ற மூல உபாயத்துடன் முன்னெடுத்து வந்தன.

அதன் பின்னர் 1956ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கௌரவ பிரதம மந்திரியாகிய எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டரா நாயக்க அவர்களின் கீழான அமைச்சரவையில் விவசாய, உணவு , கூட்டுறவு அமைச்சராக இருந்த பிலிப் குணவர்த்தனா அவர்களினாலே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட தனி நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் , விளை பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் , விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கள் போன்றவைகளை பல அபிவிருத்தித் திட்டங்களை ஒரே கூரையின் கீழ் ஒரே நேரத்தில் முன்னெடுப்பதற்கு வசதியாக பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களாக மாற்றி அமைத்தார்.

ஆனால் பல ஆண்டுகள் கடந்த நிலையிலும் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களினால் ஒரே நேரத்தில் பல அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. இதனாலேயே மீண்டும் தனி நோக்குக் கூட்டுறவுச் சங்கள் உருப்பெறத்தொடங்கியது. கிராமியமட்டத்தில் கடன் வழங்குவதற்காக தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய நாணயசங்கங்கள் புத்துயிர் பெற்று எல்லாக் கிராமங்கள் தோறும் தோற்றம் பெற்று இன்று மிகச் சிறப்பாக செயல்படுகின்றன.

அதேபோன்று குறுகிய காலங்களுக்குள் தோற்றுவிக்கப்பட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ,கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கள் , கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் அண்மைக் காலத்தில் யாழ். மாவட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றில் அபரீத வளர்ச்சிகள் எண்ணத்தை பறை சாற்றி நிற்கின்றது. எத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் மக்கள் மயப்படுத்தப்பட்ட சிறந்த நிறுவன அமைப்பு கூட்டுறவுதான் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்நிலையில் விவசாயத்தை நிலையாக நீடித்து வைத்திருப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் இயற்கையோடு ஒன்றிய சேதன விவசாய முறையை நாம் முன்னெடுப்பதற்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட சுதந்திரமாக இயங்கக்கூடிய ஒரு நிறுவன அமைப்பு ஒவ் வொரு கிராமங்கள் தோறும் இருக்க வேண்டியது தற்காலத்தின் தேவையாகும்.

சேதன விவசாயம் என்பது எமது சமூகத்திற்கு ஒரு நூதனமான விடயம் அல்ல. மூதாதையர்கள் காலம் காலமாக பின் பற்றிய விவசாய முறைகளையும் தற்கால நவீன விஞ்ஞானத்தில் மனிதனின் உடல் நலத்திற்கும் , சுற்றுச் சூழலுக்கும் தீமை பயக்காத தொழில் நுட்பங்களையும் சேர்த்து விவசாயத்தை முன்னெடுப்பதனையே சேதன விவசாயம் என்கிறோம்.

விவசாயத்தில் எமது மூதாதையர்கள் பின்பற்றிய முறை என்கின்ற போதே அங்கு கூட்டுறவு முதன்மை பெறுகிறது. அதனால் மீண்டும் இயற்கையோடு ஒன்றிய எமது விவ சாய முறைக்கு கூட்டுறவின் ஊடாக புத்துயிர் அளித்து விவசாயத்தில் மறு மலர்ச்சி ஏற்படுத்தப்படவேண்டும்.

உலகின் மனித இனத்தின் பெருக்கத்திற்கு ஏற்ப பட்டினி நிலைமையை போக்கி உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்காக உலகத்தில் 1960ஆம் ஆண்டு ஏற்பட்ட பசுமைப் புரட்சியின் விளைவாக விவசாயத்தில் அதி உயர் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட விவசாய இரசாயனங்கள் , செயற்கை உரங்கள் என்பவற்றில் மிதமிஞ்சிய பாவனையினால் இயற்கையின் பசுமையான தன்மைக்கு மாறாக இயற்கையின் சம நிலையற்ற தன்மை தோற்றம் பெற்று சுற்றுச்சூழல் பாதிப்படைந்து பூமியில் வாழ்கின்ற மனித குலம் ஆரோக்கியமற்ற சந்ததிகளாக உருவாகுவதற்கு வழி கோலியது. அதனுடைய தாக்கம் எமது மக்களையும் விட்டு வைக்கவில்லை.

நாளுக்கு நாள் புற்று நோய்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. அது மட்டுமல்லாது பல புதிய் நோய்கள் உருவாகின்றன.

பூமியில் மனித இனத்தின் இருப்பையே ஆட்டம் காண வைக்கும் நிலை தோன்றியுள்ளது. விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அசேதனங்களின் 40 வீதமான தாவரங்களின் பயன்பாடு இன்றி உப்பாகவே அன்றி வாயுவாக இயற்கையுடன் சேர்வதனால் மனிதனுக்கு கேடுவிளை விக்கின்றன.

மீதியான 60 சதவீத தாவரப் பயன்பாட்டுக்கு உட்பட்டு விளை பொருட்களில் நஞ்சாகப் பொதிகின்றது. இதனை மனிதன் உணவாக உட்கொள்ளும் போது அவனது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கின்றது.

ஆகவே ஒட்டுமொத்தமாக நோக்கின் விவசாயத்தில் அசேதனங்களின் பாவன்னயினால் நீண்ட கால நோக்கில் மனித உடலுக்கும் , இயற்கையின் சுற்றுச் சூழலுக்கும் ஏதோ ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தப்படுகின்றன.


திரு. க.புவனேந்திரன்
முகாமையாளர்,
கூட்டுறவு கிராமிய வங்கி,
புலோலி. ப.நோ.கூ. சங்கம்.

அத்துடன் மண்ணின் பௌதிக , வேதியல் , உயிரியல் நிலைமைகள் மாற்றமடைவதினால் விவசாயத்துறையில் நிலைத்த நீடித்த தன்மை அற்றுப்போகின்றது.

ஆகையினால் இந்நிலையில் இருந்து எமது தேசத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு சேதன விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலைமை உருவெடுத்துள்ளது. இதற்கு வலுவான நிறுவன அமைப்பாக சேதன விவசாய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களை கிராமங்கள் தோறும் தோற்றுவிப்பதற்கான வசதிகளையும் , வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதோடு எதிர்காலத்தில் விவசாய மானியங்கள் யாவும் சேதன விவசாய அபிவிருத்திக்கு மாற்றி அமைப்பதற்கும் நாடாளுமன்றத்தில் சட்டங்கள் உருவாவதற்கும் அனைவரும் ஒன்று பட்டு ஒத்துழைத்து சேதன விவசாயத்தை அபிவிருத்தி செய்வதினால் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை உருவாக்க வித்திடுவோம் வாரீர்.

## பொல்லிங்கர்; ஜோன்ஸன் வேகத்தில்

# இந்திய அணி சரிந்தது தொடர் ஆஸி.வசம்



(குவகாத்தி)

பொல்லிங்கர், ஜோன்சன் ஜோடியின் வேகப்பந்து வீச்சு கை கொடுக்க அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி தொடரைத் தனதாக்கியது.

முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் இந்திய அணி சொந்த மண்ணில் தொடரைப் பறிகொடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் நடந்து முடிந்த 5 போட்டிகளில் 4இல் வெற்றிபெற்று அவுஸ்திரேலிய அணி 4:2 என்றகணக்கில்முன்னிலையிலிருந்துவருகிறது.

இந்நிலையில் 6ஆவது ஒருநாள் போட்டி நேற்று குவகாதியில் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே தொடரை தக்கவைக்கலாம் என்ற நிலையில் இந்திய அணி களம் இறங்கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்க ஜோன்சன், பொல்லிங்கர் ஜோடியின் பந்துவீச்சு அதிர்ச்சி அளித்தது.

இந்த ஜோடியின் பந்துவீச்சில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வீரோந்திர சேவாக் 4 பந்துகளில் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 06 ஓட்டங்களுடனும் கௌதம் காம்பீர் பூச்சியத்துடனும் டெண்டுல்கர் 17 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 10 ஓட்டங்களுடனும் யுவராஜ் சிங் 06 ஓட்டங்களுடனும் சுரேஸ் ரெய்னா பூச்சியத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 9 ஓவர்களில் 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை பறிகொடுத்து தத்தளித்தது.

இந்நிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த தோனி-ஜடேஜா ஜோடி ஓரளவு நம்பிக்கை அளிக்க இந்தியா அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி தற்காப்பு ஆட்டத்தை வெளிப்படுத்த இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை ஆமைவேகத்தில் உயர்ந்தது.


இந்த. ஜோடி 6ஆவது விக்கெட்டுக்காக 21.1 ஓவர்களில் 48 ஓட்டங்களை சேர்த்த போது அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 77 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 24 ஓட்டங்களை எடுத்து பொல்லிங்கரின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

எனினும் தோனிக்கு ஆட்டமிழப்பு வழங்கிய முடிபு தவறானது என வீடியோ ரீபிளே மூலம் தெரியவந்தது. இத் தீர்ப்பை இலங்கை நடுவர் அசோக டி சில்வா வழங்கினார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹர்ப்பஜன் சிங் வந்தவேகத்திலேயே பூச்சியத்துடன் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 30.3 ஓவர்களில் 75 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 7ஆவது விக்கெட்டையும் இழந்தது.

இந்நிலையில் 8ஆவது விக்கெட்டுக்காக ஜடேஜாவுடன் இணைந்த பிறவீன் குமார் அதிரடியாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார். மறுமுனையில் ஜடேஜா ஒரு நாள் போட்டியில் தனது இரண்டாவது அரைச்சதத்தை கடந்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி கௌரவமான இலக்கை அடைந்தது.



இதில் ரவீந்திர ஜடேஜா 103 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 57 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நெகரா களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய பிரவீன்குமார் தனது முதலாவது அரைச்சததைப் பூர்த்தி செய்தார்.

எனினும் நெகரா 04 ஓட்டங்களுடனும் அடுத்துவந்த பட்டேல் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்க இந்திய அணி 48 ஓவர்களில் 170 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பிரவீன்குமார் 51 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 54 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் பொல்லிங்கர் 10 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 35 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் மக்கெல் ஜோன்சன் 3 விக்கெட்டுக்களையும் வோட்ஷன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 171 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்தில் மார்ஷ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டக்காக இணைந்த வோட்ஷன்- பொன்டிங் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் ஷேன் வோட்ஷன் 49 பந்துகளில் (10பவுண்டரிகள் உட்பட) 49 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 57 பந்துகளில் (3பவுண்டரிகள் உட்பட) 25ஓட்டங்களுடனும் ஹர்பஜனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.

எனினும் தொடர்ந்து வந்த வைற், ஹசி மற்றும் வோக்ஸ் பிரகாசிக்க அவுஸ்திரேலிய அணி 41.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 172 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் மைக்கெல் ஹசி 62பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 35ஓட்டங்களையும் வோக்ஸ் 21பந்துகளில் (4பவுண்டரிகள் உட்பட) 23ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் வைற் 25 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 2விக்கெட்டுகளையும் ,முனாப்பட்டேல், சுரேஸ் ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு அடித்தளமமைத்த பொல்லிங்கர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 7போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்திரேலிய அணி 4.2 என்ற கணக்கில் தனதாக்கியது.








இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய கணனிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவனுக்கான சான்றிதழை நிர்வாக சபை உறுப்பினர் திருமதி கணேசராசா வழங்குவதையும், திரு கணேசராசா உரையாற்றுவதையும் சான்றிதழ் பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.



மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி

## தேசியமட்ட இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்து மோதுகிறது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் கல்முனை சாஹிரா கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

இன்று பிற்பகல் 1.30மணிக்கு கொழும்பு ஹென்றி பரடைஸ் பாக் மைதானத்தில் நடைபெறும் இப் போட்டி தென்னிலங்கை ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கொழும்பு ஹரிக் கல்லூரியை 7:0என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

(ச-7)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்க விண்ணப்பம்

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் மொழி மூல மாணவர்களை கௌரவிப்பதற்காக காயத்திரி பப்பிளிக்கேஷன் நிறுவனம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இந்நிறுவனத்தின் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி மாகாணமட்டத்தில் இம் மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எனவே தேசிய, மாகாண ரீதியில் தமிழ் மொழியில் தோற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் தமது வர்ணப் படத்துடன் பெயர், முகவரி, பாடசாலையின் பெயர், வகுப்புப் பிரிவு, பெற்றுக்கொண்ட புள்ளி என்பவற்றுடன பாடசாலை அதிபரின் அத்தாட்சிப் பத்திரத்தை நவமோகன், காயத்திரி பப்ளிக்கேஷன், 22அ, ரூபன் பீரிஸ் மாவத்தை, களுபோவில, தெஹிவளை என்ற முகவரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை 0112727621 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# வேப்பமரத்தில் இருந்து 'கள்' சித்தன்கேணியில் அதிசயம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணியில் வேப்பமரத்திலிருந்து கள் வடியும் அதிசய நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது. அங்கு கடந்த மூன்று நாள்களுக்கு மேலாக கள் வடிந்து கொண்டிருப்பதாக வீட்டிலுள்ளவர்கள் தெரிவித்தனர்.

கலைவாணி வீதி சித்தன்கேணியைச் சேர்ந்த ஆசை குணசேகரம் என்பவரின் வீட்டிலுள்ள வேப்பமரத்திலிருந்து கள் வடிகின்றது. இரண்டு அடி சுற்றுவட்டமுடைய வேப்பமரத்திலிருந்து வடியும் கள்ளினை வீட்டுச் சொந்தக்காரர்கள் சேகரித்து வருகின்றனர். மரத்தின் சிறிய வெடிப்பொன்றிலிருந்து வடியும் வெள்ளை நிறத்திலானகள் வடிந்து கொண்டிருப்பதுடன் இதில் கள்ளின் மணமும் வீசுகின்றது. இக்கள்ளை பெறுவதில் பலர் விருப்பம் கொண்டுள்ளதுடன் பெருமளவானோர் பார்வையிட்டும் வருகின்றனர். இக்கள் மருத்துவப் பாவனைக்கு உதவும் என தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## தேர்தல் அறிவிப்புக்குப் பின்...

தாவலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் கண்டி மாவட்டத்தை சேர்ந்த இரு அமைச்சர்களும், கொழும்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களைச் சேர்ந்த ஒவ்வொரு அமைச்சர்களும் எதிர்க்கட்சிக்கு தாவலாம்.

எதிர்த்தரப்பில் உள்ள பல உறுப்பினர்களும் ஆளும் தரப்புக்கு மாறும் சாத்தியங்களும் உள்ளன. இந்த அமைச்சர்கள் கடந்த வாரம் அரசு சமர்ப்பித்த வரவுசெலவுத் திட்டகணக்கறிக்கையின் வாக்கெடுப்பிலும் பங்குபற்றவில்லை.

ஜனாதிபதியின் தேர்தல் அறிவிப்புக்கு பின்னர் அரச தரப்பில் உள்ள பல அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது நிலைப்பாடுகள் குறித்து பல கட்சிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின் றனர்.

அவர்கள் மங்கள சமரவீரவின் கட்சியுடன் மட்டுமல்லாது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுடனும் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர். சந்திரிகா மீண்டும் அரசியலில் ஈடுபடப்போவதில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் அமைச்சர்கள் தொடர்ந்து சந்திரிகாவை வலியுறுத்தி வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வாக்கெடுப்பை மறந்த...

வெளிவரும் சண்டே ரைம்ஸ் வாரஏடு தெரிவித்துள்ளது. அதன் முக்கிய பகுதிகள் வருமாறு,

இலங்கையில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது பொருளாதார வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் கடுமையான கருத்து மோதல்களில் ஈடுபடுவதுண்டு. ஆனால் கடந்த வாரம் சரத் பொன்சேகா அமெரிக்காவில் மாட்டிக் கொண்ட விவகாரமே சூடான விவாதமாக இருந்தது.

இதனை பயன்படுத்தி கணக்கறிக்கையின் வாக்கெடுப்பில் அரசு இலகுவாக வெற்றி பெற்று விட்டது. பொன்சேகாவின் அரசியல் பிரவேசம் முற்றாக உறுதிப்படுத்தப்படாத நிலையிலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும், ஜே.வி.பியும் பொன்சேகா விவகாரம் தொடர்பில் அதிக நேரத்தை நாடாளுமன்றில் செலவிட்டிருந்தன.

பொன்சேகா விவகாரத்தை அரசு தவறாக மேற்கொள்வதாக அவை குற்றம்சாட்டியிருந்தன. பொன்சேகா தொடர்பாக தொடர்ச்சியாக நடைபெற்ற விவாதங்கள் அரசின் நிதி அறிக்கை மீதான பார்வையை திருப்பியிருந்தது.

இதனால் அரசு 125வாக்குகளை அதற்கு ஆதரவாக பெற்றிருந்தது. 78 வாக்குகள் எதிராக இடப்பட்டிருந்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ரணில் இந்திய...

தெரிவித் துள்ளதாவது, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்காவின் இந்திய பயணம் அரசின் நடவடிக்கையினால் பெரும் நெருக்கடிகளை சந்தித்துள்ளது.

இந்தியாவுக்கு செல்லும் போது தனது மெய்பாதுகாவலர்களையும் அழைத்து செல்வதற்கு விக்கிரமசிங்கா பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பித்திருந்தார். ஆனால் பாதுகாப்பு அமைச்சு இதுவரை பதில்தரவில்லை. இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கா பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பல தடவைகள் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றபோதும் அது கைகூடவில்லை. இந்திய விஜயத்தின் போது ரணில் விக்கி ரமசிங்கா இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் எம்.கே. நாராயணன், வெளிவிவகார அமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரை சந்திப்பார் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களை...

காலமாக இலங்கையிலிருந்து அரசியல் தஞ்சம் கோரி அவுஸ்திரேலியாவுக்குவரும் தமிழ் மக்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன. இந்த வருடத்தில் 39கப்பல்களும், படகுகளும் அவுஸ்திரேலியாவில் தரையிறங்க முற்பட்டுள்ளன.

தற்போது இந்தோனேசியாவின் கடற்பரப்பில் உள்ள இரு கப்பல்களில் உள்ளவர்க ளும் அங்கு தரையிறங்க மறுப்பு தெரிவிப்பதுடன் அவுஸ்திரேலியாவுக்கு தம்மை அனுப்புமாறு கோரி வருகின்றனர். இலங்கை முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் விரைவுபடுத்தப்பட வேண்டும். இது தொடர்பான பேச்சுகளில் ஈடுபடுவதற்கே நான் இன்று வருகிறேன் என தெரிவித்துள்ளார். 2003ஆம் ஆண்டிற்கு பின்னர் அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஒருவர் இலங்கை வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சட்டவிரோத குடியேற்றவாசிகள் மற்றும் ஆட்கடத்தல் விவகாரம் குறித்து அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கிடையிலான உயர்மட்டப் பேச்சுவார்த்தை இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கு இன்று வரவுள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் இவ்விடயங்கள் தொடர்பில் இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோத குடியேற்ற வாசிகள் அதிகமாக வரும் நாடென் பதில் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கை முந்திக் கொண்டு இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளதாக கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூ தரக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். அண்மையில் 39இலங்கையர்களை ஏற்றிக்கொண்டு அவுஸ்திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு கவிழ்ந்ததில் 12பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

# மரண அறிவித்தல்

## திருமதி வேலாயுதம் மனோன்மணி



மூளாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் மனோன்மணி அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் வேலாயுதம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மலேயன் பென்சனியர் சுப்பிரமணியம் பாறுவதிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான மலேயன் பென்சனியர் எதிர்நாயகம் சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும், இ.மனோராணி, கு.மதனராணி, த.ஆனந்தராணி, வே.கருணாகரன் (பொருளியல் ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.ம.வி), ந.சிவராணி (ஆசிரியை யா/ஒஸ்மானியாக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ச.இராசரத்தினம், நா.குமரகுருநாதன் (கிராம சேவையாளர்), அமரர் க.தர்மேசன் (வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவியாளரும், காங்கேசன்துறை மாவட்ட சாரண உதவி ஆணையாளரும்) மற்றும் க.சயந்தி (ஆசிரியை யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), சி.நந்தகுமார் (இலிகிதர் யாழ்.ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அமரர்களான வி.செல்வம், சு.கனகரத்தினம் (Rtd.RMP) மற்றும் சி.சிவபாக்கியம், த.சிவகங்கை (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், அமரர்களான எ.பாலசுப்பிரமணியம், ச.வினாசித்தம்பி (ஆசிரியர்), கோ.தம்பிராசா மற்றும் க.அமுதவல்லி, ம.சிவசுப்பிரமணியம் (தலைவர் சங்கானை ப.நோ.கூ.ச) ஆகியோரின் மைத்துனியும், அமரர் பா.நாகேஸ்வரியின் சகலியும்,

அம்பிகை ஜீவேஸ், கு.பிரணவன் சுவர்ணா, சுகிர்தாம்பிகை தேவகுமார், த.தரணிதரன், த.சேந்தரன், த.வித்தகதரன், க.அனிதா, க.கோபிகாந்த், ந.பத்மபிரியன், ந.அபிப்பிரியன் ஆகியோரின் பேர்த்தியும், ஜீ.தமிழரசி, ஜீ.கலையரசன், பி.திருமகள், தே.பிரவீன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9.11.2009) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'தரன் இல்லம்'
தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்,

தகவல்:
வே.கருணாகரன் (மகன்)
T.P.: 021 3216389

(C-3687).

## புலிகள் இல்லாதொழிக்...

50ஆயிரமாக குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலை போராளிகள் இன்னமும் கொழும்பில் எஞ்சியுள்ளதாகவும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமிழீழ விடுதலைப் புலி களினால் மீள ஒருங்கிணையக் கூடிய சாத்தியம் கிடையாது. தமிழ் புலம்பெயர் மக்களின் ஆதரவு புலிகளுக்கு காணப்படுகிறது. அதனை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சமஷ்டி முறைமையை அறிமுகப்படுத்து வதன் மூலம் நாடு பிளவடையக் கூடிய சாத்தியம் உள்ளது. யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு மேற்குலக நாடுகள் கடும் அழுத் தத்தை பிரயோகித்து வந்தன.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, எகிப்து, கியூபா மற்றும் பிரேஸில் போன்ற நாடுகள் இலங்கையின் தேசியப்பாதுகாப்பு குறித்து தெளிவாக புரிந்து கொண்டு செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## பொன்சேகா...

முக்கிய தேசியப் பிரச்சினைகள் தொடர்பில் சரத் பொன்சேகா வகிக்கும் நிலைப்பாட்டின் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டுள்ளார் என்பதனை அறிவதற்காக சரத் பொன்சேகாவின் பிரதிநிதியிடம் தாம் வினாக் கொத்து ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நான்கு முக்கிய தேசியப் பிரச்சினைகள் தொடர்பில் இந்த வினாக் கொத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கு இடம்பெயர் மக்கள் மீளக்குடியேற்றம், தேசிய இனப்பிரச்சினை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மற்றும் ஊழல் மோசடி தடுப்பு போன்ற காரணிகள் தொடர்பில் சரத் பொன்சேகாவின் நிலைப்பாட்டை அறிந்ததன் பின்னர் அவருக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித் துள்ளார். (ச-5)

## தமிழ் கட்சி...

இது குறித்து அவர் பி.பி.சி. தமிழோசைக்கு தெரிவித்ததாவது, இந்தப் பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களில் நடைபெற்றதாகவும், இன்னும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு பிறகு, சிறுபான்மை சமூகங்களின் சார்பில் குறைந்தபட்ச கொள்கை திட்டம் ஒன்றினை முன்வைத்து, அதற்கான அரசியல் நடவடிக்கைகளில் ஒன்று சேர்ந்து செயற்படுவது சம்பந்தமான ஒரு முடிபை எட்டலாம் என்கிற நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

தங்களால் வகுக்கப்படவுள்ள குறைந்தபட்ச செயற்திட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் அவசர மீள்குடியேற்றம், நாட்டின் பல பகுதிகளில் இருக்கும் தமிழ் பேசும் மக்களின் காணிகள் அபகரிப்பு சம்பந்தமான விடயங்கள் போன்றவை இடம்பெறும் என்றும் ரவூஃப் ஹக்கிம் கூறினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சிறுபான்மை கட்சிகளுக்கு இடையே ஒருங்கிணைந்த செயற்பாட்டை உருவாக்குவதற்கான முயற்சியையும் உள்ளடக்கியும் அந்த குறைந்தபட்ச கொள்கைத் திட்டம் உருவாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சு வார்த்தைக்கும் ஐக்கிய தேசிய முன்னணியில் உருவாகி இருக்கின்ற எதிர்க்கட்சிக் கூட்டணிக்கும் இடையில் எந்தத் தொடர்பும் கிடையாது.

அவ்வாறான நோக்கத்தோடு நாங்கள் இந்தப் பேச்சு வார்த்தையில் ஈடுபடவில்லை. இருந்தும் எங்களுடைய கட்சிகளை எல்லாம் இவ்வாறான ஒரு காலகட்டத்திலே தமிழ் பேசும் கட்சிகளினுடைய ஒருங்கிணைந்த செயற்பாட்டின் மூலம் சிறிய அழுத்தத்தைக் கொடுக்கலாம்.

ஆனால் எதிர்க்கட்சிக் கூட்டணியில் தமிழ் பேசும் கட்சிகள் இணைய வேண்டும் என்ற நோக்கத்திலே இது செய்யப்படவில்லை என்பதை நான் மிக திட்டவட்டமாக சொல்லிக் கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளர் குறித்த முடிபை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது குறித்த அறிவிப்பை ஜனாதிபதி செய்ததன் பிறகு நாங்கள் வெளியிடுவதற்கான இணக்கப்பாட்டை எட்டியிருக்கிறோம். எவர் அந்த வேட்பாளராக இருக்கக் கூடும் என்பது குறித்து இப்போதைக்கு நாங்கள் எதையுமே வெளியிட முடியாது. குறிப்பாக முன்னாள் இராணுவத் தளபதி தான் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வரப் போகிறார் என்ற கதைகள் வெளியாகியிருக்கின்றன. அதை இரு கட்சிகளோடு பேசித்தான் தீர்மானிக்க வேண்டும். என்னைப் பொறுத்த மட்டிலே ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி ஜே.வி.பி. என்கிற இடதுசாரி எதிர்க்கட்சியையும் ஐக்கியதேசிய முன்னணியையும் இணைத்து தற்போது பதவியிலிருக்கிற ஜனாதிபதிக்கு ஒரு பலமான சவாலை ஏற்படுத்துவதற்கு நாங்கள் தயாராகி வருகிறோம் என்றார். (ச-3)


# வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடிநிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றிவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரியவாய்ப்பு.

## வேலை பற்றி

- ஒரு மாத பயிற்சிக் காலத்தை உடையது.
- இக்காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
- பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

## அடிப்படைத் தகைமை

- G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி.
- 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 15.11.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல. C-3643
C/o, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C-3643)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.